போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

# திராவிடநாடு

மலர் 13 | 28—11—54 | இதழ் 22

## ஒரு ★ இலட்சிய நடிகர் ★

சினிமாக்காரன்-கேலியோடு அழைக்கின்றனர், அவனை.

நடிகன்மட்டுமல்லய்யா அவன் - சொந்தத்திலல்லவோ படம் எடுக்கிறான்-பெருமூச்சோடு பேசலாயினர், பிரபுக்கள்.

படங்களா, அவை? பாபம்! கர்மம்! கன்றாவி!!—மாலை வேளையிலே, தலை நரைத்தோர், இவ்வண்ணம் உரையாடுகின்றனர்.

ஒவ்வொன்றிலும், ஏதாவது இல்லாமல் இல்லை-நம்மைப் பழிப்பதுபோல—மாளிகைகள் குமுறுகின்றன, இவ்விதம். மார்க்க தாதாக்களுக்கோ சொல்லவேண்டாம்—விழியே வேல், மொழியே கூர் வாளாகித் தாக்குகிறது, அவனை.

நகைச்சுவையாம், நகைச்சுவை! 'மன்னர்' என்று வேறல்லவா, இந்த 'மகா முட்டாள்கள்' வருணிக்கின்றனர்.-இவ்விதமும் ஒரு கணை—அவனது சக நடிகத் தோழர்களிடமிருந்து.

ஏதோ நடித்தோம்; நாலு காசு சம்பாதித்தோம் என்றில்லாமல், போதனைவேறல்லவா புரியக் கிளம்பிவிட்டான்; போக்கிரி — ஏடு நடத்துவோர், இவ்வண்ணம் எழுத்துக்களை அம்புகளாக்கி வீசுகின்றனர், அவனை நோக்கி.

அவனது படங்களை நாட்டில் நடமாடாமல் தடுக்கவேண்டும்; 'கத்தரிக்கோல்' பாய்ச்சினால் தான் புத்தி வரும்; திருந்துவான் — அதிகாரிகள் மத்தியிலே, இப்படி, அடிக்கடி பேசப்படுவதுண்டு.

அவனை, இந்த நாட்டைவிட்டே விரட்ட வேண்டும்; அப்போதுதான் நல்லது—இப்படியும் யோசனை கூறப்பட்டது, காங்கிரசில்.

இளைஞர்கள் மனதையெல்லாம் உலைக்கூடம் ஆக்குகிறான்; அவனுடைய பெயர் கேட்டால், அடடா! என்ன கூட்டம் கொட்டகைகளில்!!—எரிச்சலும், புகைச்சலும்கொண்டோர், நாட்டின் அந்தஸ்துக்கே இழுக்குத் தேடுவதாகப் பாய்ந்தனர்.

★

அவனோ, இவைகளைக் கேட்டுச் சிரித்தான்—சிந்தாகூலம்கொள்ளாமல் சிரித்தான்-பிரபுக்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள், 'கனம்'கள் அத்தனை பேரையும் பார்த்துச் சிரித்தான்—'பழமை மிரள்கிறது; புதுமை வளருகிறது' என்று கூறியபடியே சிரித்தான்-கீழ்க்கண்டபடி, கேட்டவர்களுக்குப் பதில் தந்தபடியே சிரித்தான்.

"நான் நடிக்கிறேன்! போலியாக அல்ல; இதயத் துடிப்புடன். படம் எடுக்கிறேன்! பலரைப்போல அல்ல; காரணத்துடன். கிண்டல் செய்கிறேன்! வெறும் கோணங்கியாக அல்ல; கொள்கைக்காக. நகைச்சுவை நடிகனாக இருக்கிறேன்! நாடு புகழ அல்ல; வாழ. என்னை, இவர்கள் ஏசுகின்றனர். ஆனால், தூற்றும் இவர்கள் அத்தனைபேரும், என்னுடைய படம் என்றால் ஓடோடியும் சென்று பார்ப்பது எனக்குத் தெரியும். இவர்களெல்லாம் என்னை ஏசுவதுதான், எனக்கு வெற்றி. ஏனெனில், இப்படிப்பட்ட சமுதாயப் புல்லுருவிகளை ஒழிப்பது தான், என் வாழ்க்கை இலட்சியம். ஏகும் இவர்கள், பழுத்த இலைகள். நாட்டைவிட்டே விரட்டவேண்டும் என்னை, என்று கர்ஜிக்கும் அதே நேரத்தில், கானக்குரல் மீட்டி, அதோ வரவேற்கிறது, உலக வாலிபர்குழாம். அவர்களுக்காகத்தான், நான்; இவர்களுக்காக அல்ல"

*

நாடே, சாக்கடை மொழியையும், 'சாகமாட்டானா அவன்?' என்கிற சஞ்சலக் குரலையும் அனுதினமும் எழுப்பிக்கொண்டிருந்தது. சாதாரண நடிகன் தான், அவன். ஆனால், நடிப்போடு, நாட்டின் துடிப்பையும் காட்டினான்—மனித சமுதாயத்துக்குச் சில கொள்கைகளைச் சொல்வதே என் வாழ்க்கை வழியென முழக்கமிட்டான்.

இவன் என்ன சொல்வதாம்-இந்த சினிமாக்காரன், சீர்திருத்தக் கிளம்பிவிட்டானே உலகை-பைத்யம் - போர் கூடாதென்று சொல்லிப் படம் எடுக்கிறானுமே படம்—பீரங்கிகளை, வெறும் பேச்சால் தடுக்கப்போகிறானுக்கும்—முதலாளிகளற்ற சமுதாயம வேண்டுமாமே! முட்டாள்!!—தன் வேலையைப் பார்த்துக்கொண்டு போகாமல், சர்க்கார் விஷயங்களிலும் தலையிடுகிறானுமே—சமாதானமாம்; அமைதியாம்; அன்பாம். பெரிய அறிஞன்போலும்! 'பவுடர் பூசும்' கோமாளி — இவ்வண்ணம், காரசாரமாக, ஒரு பத்திரிகை அவனைப்பற்றித் தீட்டியது—1947ல்.

**35 ஆண்டுகளாக இங்கேயே இருக்கிறான்!**

**இது, அவனுடைய சொந்த நாடல்லவாம்!!**

**வரிகளைக் கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றுகிறான்.**

**ஒழுக்கத்தைக் கெடுக்கும், உன்மத்தன்.**

**உடனே அவனை வெளியேற்றுக.**

என்றெல்லாம், விடாமல் எழுதிற்று. அவனோ, இவைகளைக் கண்டபோது, வழக்கம்போல் ஏளனமாகச் சிரித்துவிட்டுப் பேசாமலிருந்தான். அவனைப் பற்றிய அதிருப்தி, பலருக்கு, பலவிதத்தில் இருந்தபோதிலும், வெளிப்படையாக ஒரு பத்திரிகையில் கண்டனம் தீட்டப்பட்டது, இதுதான் முதல் தடவை. எனவே, பரபரப்பு, எங்கும்!

★★ அரங்கண்ணல் ★★

(9-ம் பக்கம் பார்க்க)

# 'இடியோசை'யின் கடிதம்!

அன்புள்ள ஆசிரியருக்கு,

ஆச்சரியப்படுவீர்கள், 'இவன் கூடக் கடிதம் எழுத ஆரம்பித்து விட்டானே!' என்று! என்ன செய்வது? உங்கள் முகத்தில் விழிக்கவும் வெட்கமாயிருக்கிறது, எனக்கு! மூலை, முச்சந்தி, நாலுபேர் சந்திக்கின்ற இடம், இங்கெல்லாம் நான் உங்களைப்பற்றி எவ்வளவோ பேசியிருக்கிறேன்—ஏசியிருக்கிறேன். இன்று, நேற்றல்ல—காந்தியார் துவக்கிய உப்புச்சத்தியாக்கிரககாலத்திலிருந்து, கொடிதூக்கி நான் போட்ட கோஷங்கள் கொஞ்சமல்ல! மேடையேறி உங்களையெல்லாம் வெளுத்துக்கட்டிய வார்த்தைகள் கொஞ்சமல்ல!! நம்மூர் இளைஞர் தேசிய முன்னணியினர் எனக்கு வழங்கிய 'இடியோசை' என்கிற பட்டம்கூட உங்களுக்குக் கவனம் இருக்கும். அப்பேற்பட்ட நான், கடிதம் எழுதுகிறேன், கடிதம்! என் மனதிலுள்ள குமுறலை கொட்டக் கூடிய இடம் ஒன்று உண்டென்றால், அது நீங்கள்தான். எவ்வளவோ நான் ஏசிப் பேசியும்கூட, அடிக்கடி பொதுக் கூட்டங்களில் பேசும்போது சொல்வீர்கள், "இடியோசை என்னை ஏசுகிறார்; அதற்காக நான் அவர்மீது சினங் கொள்ளமாட்டேன், தவறுதலான இடத்திலிருக்கிறார். அதனால், நம் போன்றோரை ஏசுவதே சண்டப்பிரசண்டமென நினைக்கிறார். என்றாலும், அவர் நம்நாட்டுச் சகோதரன். நாளையதினம் நம் கூடாரத்துக்கு வந்து சேரவேண்டிய உண்மையான தொண்டர்" என்றெல்லாம். அந்தச் சொற்கள் யாவும் இப்போது என் உள்ளத்தை உறுத்துகின்றன. நேரிலேயே வந்திருப்பேன்; வெட்கம் வேல்போல் பாய்கிறது; ஆகவேதான் கடிதம் தீட்டுகிறேன்.

அடடா! என்னென்ன சொல்லி, கர்ஜிப்பேன், மேடைகளில். "ஜரிகை தலைப்பாக் கட்சியினர்—ஏழைகள் தாலியறுக்கும் ஜமீன்தார்கள் வாழும் ஜஸ்டிஸ் கட்சி—பட்டம் பதவிக்காரர்கள்—வேட்டை நாய்கள் —மக்களை மறந்தவர்கள்—பதவித் துண்டு கிடைத்தால் போதும் பணக்காரர் பாதத்தை நக்கத் தயங்காத நாலுகால் பிராணிகள்……" இப்போது நினைக்கும்போது, எனக்கே வெட்கமாயிருக்கிறது! நான் பேசாத இடங்கள், இல்லை—போன எம். எல். ஏ. தேர்தல் நடந்தபோது, ஏகக் கிராக்கி எனக்கு. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் கூடப் போயிருக்கமாட்டார்! அவ்வளவு தூரம், இண்டு இடுக்கு, கிராமம் பட்டினம்—அங்கெல்லாம் போனேன். உங்களையும், மற்றவர்களையும் 'இடியோசை' போல், தாக்கினேன்—பேசினேன். இப்போது மந்திரியாயிருக்கிறாரே; பக்தவத்சலம்—அவர் நின்ற தொகுதியில், அவரை எதிர்த்து ஒரு ஜமீன்தார், வேலைசெய்தார்! கேட்கவேண்டுமா, என் குரலை? 'ஏ! ஜமீன்தாரே! நாற்பதுகோடி மக்களைக் கொண்ட காங்கிரசை எதிர்க்கும்காளானே! ஏ, உதிரியே!! உன்னாலா, இவரை ஜெயிக்கமுடியும்?' என்று கர்ஜித்தேன். கூட்டம் முடிந்ததும், பக்தவத்சலம்கூட பலே! பலே! என்று பலருக்கு மத்தியில் பாராட்டினார் என்னை. கடலூருக்கும் போயிருந்தேன், கர்ஜிக்க! இப்போது மந்திரியாக்கப்பட்டிருக்கும் எஸ். எஸ். ராமசாமியை ஆதரித்து நீங்கள் பேசினீர்களாம்—அதற்குப் பதில் சொல்லி நான் பேசியபோது, சொன்னேன், "இந்த எஸ்.எஸ். இராமசாமிஒருவர்தான் வன்னிய குலத்தைச் சேர்ந்தவர் என்று வாய்ப்பந்தல் போட்டார்களாம், தி. மு. க-வினர்! அவர்களைக் கேட்கிறேன், உழைப்பாளர் கட்சியை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் நிற்கும் சீனிவாசப் படையாச்சி, யார்? அவரும் வன்னியகுல திலகம்! தேர்தலுக்கென்று கட்சி துவக்கியிருக்கிறார், இந்த இராமசாமிப் படையாச்சி. சீனிவாசப்படையாச்சியோ, தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர். அவரைவிட இவர், எவ்வளவோ மேல்" என்று! உதாரணத்துக்கு, இரண்டொன்றைச் சொன்னேன். இதைப்போல், காங்கிரஸ்காரர்களுக்காக நான் ஆதரித்துச் செய்த பிரசங்கம், கொஞ்ச நஞ்சமல்ல. குமுறும் எரிமலை, முழங்கும் அலைகடல், தாவிவரும் மின்னல் — இப்படியெல்லாம் கூட என்னைப் பாராட்டியிருக்கின்றனர், என் கட்சித் தோழர்கள்! அப்படிப்பட்ட நான் உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்—இந்தச் செதியைப் பத்திரிகையில் போடுங்கள் — "இடியோசை, இனி, கதரைக் கட்டமாட்டார்! கைத்தறியே, உடுத்துவார்!! காங்கிரஸ் கட்சியிலிருந்த நாலணா அங்கத்தினர் பதவியையும் ராஜினமா செய்துவிட்டார். ஏனெனில், காங்கிரஸ் உருப்படாது" என்பது அவருடைய முடிவாம்.

ஆச்சரியமாயிருக்கும், உங்களுக்கு? என்னைப் போன்ற தேசிய நண்பர்கள் எல்லாம் மனமயக்கத்திலேயிருக்கிற நேரம், இது! நாட்டிலுள்ள ஜில்லா போர்டுகளில் எல்லாம், காங்கிரசின் மூவர்ணக் கொடி, 'ஜாம், ஜாம்' எனப் பறக்கிறது. ஒரு இடத்தில் கூட, மாற்றுக் கட்சியினர் வரமுடியவில்லை! அதிலும், காமராஜர் முதலமைச்சர் ஆனதுமுதல், காங்கிரசின் புகழ் அதிகரித்திருக்கிறது—என்று, என்னைப் போன்ற தொண்டர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் கூறுகிறேன்—காங்கிரஸ் இனி உருப்படாது!—என்று. விளக்கின் ஜோதி, பிரகாசமாக இருக்கிறது! செச்சே, விளக்கே அணையப்போகிறது என்று கூறுகிறேன், நான்!' வெடிக்கின்ற உள்ளத்தோடு இந்த வேதனையை, வெளியிடுகிறேன்.

இனிக் காங்கிரஸ் உருப்படாது! இதை, காந்தியாரே ஒருபோது சொன்னபோது கூட என்னைப் போன்ற தொண்டர்களுக்கு என்னமோபோலிருந்தது. இதே உண்மையை நீங்கள் எல்லாம் கூறியபோது கூட, எரிச்சல்தான்வந்தது, எங்களுக்கு. ஆனால், இன்றோ, நானே கூறுகிறேன், அப்படி! அதுவும், தினமணியும் – மித்திரனும் ஜெயக்கொடி நாட்டிவிட்டது காங்கிரஸ் என்று கம்பீரமாக எழுதித் தள்ளிடும் இந்த நேரத்தில். இவனுக்கென்ன பித்தமோ என்று கூடக் கேட்பார்கள்—"பாரடா பார், எத்தனை கட்சிகள் உண்டிங்கே. எதனாலாவது, ஒரு ஜில்லா போர்டையாவது கைப்பற்ற முடிந்ததா? நமது அறுபதாண்டுப் பயிரான காங்கிரசன்றோ, கம்பீரக் கொடியை நாட்டியிருக்கிறது.

இதைக் கண்ணாரக் கண்டும், காங்கிரஸ் இனி உருப்படாது என்கிறாயே—கசடனே உனக்கென்ன உன்மத்தமோ?" என்றுகூடக் கேட்பார்கள். நான், நிலைமையை உணர்ந்தே சொல்லுகிறேன்; கண்ணீர் சிந்திய வண்ணமே கதரை எறிகிறேன்—கடிதம் தீட்டுகிறேன்.

காங்கிரஸ் நண்பர்கள் சொல்லுகிறார்களல்லவா, ஜில்லாபோர்டு தேர்தலில் காங்கிரஸ் ஜயஸ்தம்பம் நாட்டிவிட்டதென்று. அதைக் காட்டுகிறேன் — பிறகு, நீங்களே சொல்லுங்கள். செங்கற்பட்டு ஜில்லா — பக்தவச்சலத்தையும், அளகேசனையும் பெற்றிருக்கும் ஜில்லா! இதற்கு யார் ஜில்லா போர்டு தலைவர் தெரியுமோ? ஒரக்காட்டுப்பேட்டை **ஜமீன்தார்!** முன்பு சொன்னேனே, காங்கிரஸ் மந்திரி பக்தவத்சலத்தை எதிர்த்து நின்றார் ஒரு ஜமீன்தார் என்று—அவரேதான், இவர். பக்தவத்சலம் தோல்வியடைந்ததே, இவரால்தான் என்றுகூட நாங்கள் பேசிக்கொண்டோம்! அவர், இன்று ஜில்லாபோர்டு தலைவர்!! அதுவும் காங்கிரஸ் கட்சியால், அங்கீகரிக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட அபேட்சகர்!!! இவரைத்தான், தேர்தலின்போது "உதிரியே! ஏழைகளை வதைக்கும் புலியே! ஏ, ஜமீன்தாரே!" என்றெல்லாம், நான் பேசியது. இவர், தலைவராம்! காங்கிரஸ் கட்சி அங்கீகாரம் தந்திருக்கிறது!! 13—8—0 செலவு—நாலணா, காங்கிரசில் சேர — மீதிக்கு, கதர் வேஷ்டியொன்று, மேலாடை ஒன்று. உடனே, இவர், காங்கிரஸ்காரராகிவிட்டார்! இந்தக் கன்றாவியைப் பார்த்தபின்னும், நான் கதர், அணிந்தென்ன பிரயோஜனம்?

செங்கற்பட்டில் மட்டும்தான் இப்படியென்று நினைக்காதீர்கள்—தென் ஆற்காடு ஜில்லாபோர்டுக்குத் தலைவர் யார் தெரியுமா? **சாமிக்கண்ணு!** இருவரும், காங்கிரஸ் கட்சியால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்தான். இந்தச் சாமிக்கண்ணு யார் தெரியுமா? நீங்கள் எல்லாம் ஆதரித்தபோது, நான் ஏசிப் பேசிய, உழைப்பாளர் கட்சி, ஆளாம்! அது மட்டுமல்ல, உபதேர்தல் ஒன்று வந்தபோது, இவரை நிறுத்தினார்கள்—விருத்தாசலம் தொகுதியில். நீங்கள் எல்லாம் ஆதரித்தீர்கள்! நானோ, காங்கிரஸ் அபேட்சகர் நாராயணசாமிப் பிள்ளைக்காக, கர்ஜித்தேன்—ஒரு கிராமம், விடாது. நாராயணசாமி, மிகவும் நல்லவர்! காங்கிரசுக்காக கஷ்டப்பட்டவர்!! அவரைத் தோற்கடித்தவர், இந்த சாமிக்கண்ணு—என் போன்றோரையும், காங்கிரசையும், கன்னபின்னவென்று பேசியவர். அவர், ஜில்லா போர்ட் தலைவராம்! ஏனெனில், வன்னிய சமூகத்துக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமாம்!! சாமிக்கண்ணுவைத் தவிர்த்து, ஜில்லாபோர்டு தேர்தலில் வேறெந்த வன்னியரும் வெற்றி பெறவில்லையோ என்று எண்ணாதீர்கள் — முன்பு சொன்னேனே, சீனிவாசப் படையாச்சி, நெடுநாளைய காங்கிரஸ்காரர், மாஜி ஜில்லாபோர்டு தலைவர் — அவர் போன்றோரும் இருக்கிறார்கள். ஆனால், பதவி, அவருக்கில்லையாம்! சாமிகண்ணுவுக்காம்!! இரண்டு மூன்று தினங்களுக்குமுன், சீனிவாச படையாச்சி, யாரிடமோ சொல்லி மிகவும் வருத்தப்பட்டு கொண்டாராம். இருக்காதா—நீங்களே, சொல்லுங்கள்!

கோவை ஜில்லா என்று சொன்னால், தடியடிபட்ட திருப்பூர் குமரன், என்னைப்போல் பேசும் சி. ப. சுப்பையா முதலிய பலருடைய ஞாபகம் உங்களுக்கு வரும் — நீங்களேகூட 'காங்கிரசின் கோட்டையாக இருந்த கோவை' என்று முன் போர்முறை சொல்லியதாக எனக்கு நினைவு. அந்த கோவை ஜில்லாவுக்கு அங்கீகரிக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர் யார் தெரியுமா? உங்களுக்கு நன்கு தெரிந்தவரும், உங்கள் கட்சிக்குள் நுழைய முயன்றும், 'ஐயா! தி. மு. க. உங்களைப் போன்றோரின் சொத்தையெல்லாம் ஏழைகளுக்காக்கும் கட்சியாயிற்றே' என்று கூறுவதன்மூலம் கொஞ்சம் தொலைவிலேயே வைக்கப்பட்டவருமான, பழையகோட்டை பட்டக்காரர்! கதரைக்கையாலும்தொடாதவர்!! கொதிக்காதா என்னுடைய உள்ளம்? கூறுங்கள், நீங்கள். ஆளில்லை என்றால்கூட இதைச் சகித்துக்கொள்ளமுடியும்? எவ்வளவு தொண்டர்களுண்டு தெரியுமா கோவையில், 'தொண்டர்களுக்கா துரைத்தனம்? பணக்காரர்களன்றோ வேண்டும்' என்றாலும் பணக்காரர்களும் உண்டு, காங்கிரசில். ஆனால், அவர்கள் போதாதாம்—புதிது புதிதாகப் பணக்காரர்கள் வேண்டுமாம். கொடிதூக்கி—'ஜே' போட்டு, குடும்பத்தை நடுத்தெருவிலே நிற்கவைத்திருக்கும், ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவன், நான்? எப்படியிருக்கும் எனக்கு.

செங்கற்பட்டு—தென்னாற்காடு—கோவைமட்டுமல்ல, தஞ்சைக்கு குன்னியூர் 'குறுநிலமன்னர்' சாம்பசிவ அய்யர் — மதுரை, திருநெல்வேலிக்கும் அப்படியே. காங்கிரஸ் என்ன கனவான்கள் வீட்டுச் சொத்தா? ஒருகாலம் இருந்தது, அரசியல் உலகத்தில். மிராசு இருக்கிறது—மிட்டா உண்டு—காரர்கள் ஏராளம்—கனப்பூர் சத்தம் கேட்டால் கைகட்டி நிற்க பலர் வருவர்—இவர் வலிவலம் பண்ணை—அவர், வடபாதி மைனர்—இவர் 'பாங்கி'களின் தலைவர்—அவருக்கு பராக்குக் கூறிடும் படைவரிசை ஏராளம்—என்கிற **ஒரே ஒரு தகுதியை** மட்டும் வைத்து அரசியலில் பெரிய புள்ளிகள் உலவிய காலம். அதனால்தான் 'ஜஸ்டிஸ் கட்சி' கரைந்தது, என்று 'சேலம் செய்தீர்கள்' நீங்கள். இப்போது அந்தச் சீமான்களை, பதின்மூன்றரைரூபாயில், காங்கிரஸ்காரர்களாக்குகிறார்கள் எங்கள் தலைவர்கள்! நாலணா உறுப்பினர் சீட்டு, ஒரு கதர் வேஷ்டி—சட்டை — பதிமூன்றரை ரூபாய் செலவு!! அது போதுமாம், காங்கிரஸ் காரனாகிவிட. இந்தக் கன்றாவியைக் காணவா, தடியடியும், சிறைவாசமும் ஏற்று, உங்களையெல்லாம் ஏசி, காங்கிரசுக்குப் பாடுபட்டோம், நாங்கள்! பொது வாழ்க்கையில் அன்னக்காவடிகளையும் புகச்செய்து, அவர்களையெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களில் அமர்த்தி, புதுவாழ்வு அரும்பச் செய்வர் என் எண்ணினோம். இல்லை, இங்கே! வைரக் கடுக்கன் உண்டு—கையில் பச்சை மோதிரம் உண்டு—பட்டு பீதாம்பரம் உண்டு—பல ஏக்கர் நிலபுலன் உண்டு—என்ற பெருமைகளோடு, கூட இன்னொரு பெருமையும் வேண்டுமென்பதற்காக பெரிய மனிதர்கள் 'ஜில்லா போர்டு'—'நகரசபை' — 'கோவாப்பரேடிவ் சொசைடி'—'நில அடமான பாங்க்'—ஆகியவைகளிலும் இடம் பெறுவதுண்டு. அது ஒரு கவுரவம்! அவ்வளவுதான் அவர்களுக்கு! அந்த வேட்டைக்காரர்களின் விளையாட்டுக் கூடமாகிறது, நானிருந்த கட்சி. இந்த வேதனையை எப்படிப் பொறுக்க முடியும்?

ஒரு விசித்திரத்தைக் கேளுங்கள். வட ஆற்காடு ஜில்லாவுக்கு ஒரு காங்கிரஸ்காரரைத் தலைவ

ராக்க! முடிவு செய்தனராம், அங்குள்ள காங்கிரஸ்காரர்கள். ஆனால் காங்கிரஸ் மேலிடம், ஒரு வன்னியருக்கே இடம் கொடுக்கவேண்டும் என்று சொல்லிற்றும்! இதனை ஏற்கவில்லை, அவர்கள். தங்களிஷ்டப்படி வேறொருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்—அதனால், பல காங்கிரஸ்காரர்களுக்குக் கட்சியிலிருந்தும் 'சீட்டு' கொடுத்திருக்கிறார், கரையாளர். நீலகிரியிலும் இப்படியோர் தகராறு. எப்படியிருக்கிறது, காந்தியார் பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ்? இப்படியெல்லாம் நேரும் என்றுதான், கட்சியைக் கலைக்கவேண்டுமென்று அப்போதே சொன்னார் போலும், அவர்.

இதைவிட மானக்கேடான ஒரு விஷயத்தையும் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்—காங்கிரசின் பெயரால் ஒரு கழுதையை நிறுத்தினாலும் ஜெயித்துவிட முடியும் என்று முன்பெல்லாம் பேசுவேனல்லவா, நான்? அந்தக்காலத்தையும் இந்தக் காலத்தையும் எண்ணிப் பார்க்கும் போது, இதயம், எரிமலையாகிறது. ஜில்லா போர்ட் தேர்தலில், காங்கிரஸ் மந்திரியாக இருக்கும் ஒருவர், 'ஓட்டு'க் கேட்கப் போயிருந்தாராம். அவ்வூர் மக்கள், "மதுவிலக்கைக் கொண்டு வந்த காங்கிரசுக்கு ஓட்டுப் போட முடியாது", என்று சொல்லினராம். அப்போது அந்த மந்திரியார் சொன்னாராம்— "மது விலக்கு கொண்டு வந்ததால்தானே இப்போது ஒவ்வொரு வீட்டிலும் சாராயமும், கள்ளும் உற்பத்தி செய்கிறீகள்? அது வரவில்லையென்றால் இப்படிச் செய்ய முடியுமா? ஆகவே, இந்த சலுகையைத் தந்த காங்கிரசுக்கு 'ஓட்டுப் போடுங்கள்", என்று கேட்டாராம். நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருக்கிறது! நாங்கள் வளர்த்த காங்கிரசா— இது! இன்று இருப்பது!!

எழுதஎழுதமாளாது. இவை, அத்தனையும், உங்களிடம் நேரில் சொல்லலாமென்றாலோ, வெட்கம் என்னைத் தடுக்கிறது. எவ்வளவோ, ஏசியிருப்பேன், உங்களை! அது அத்தனையும் உங்கள் மீதுள்ள எரிச்சலால் அல்ல—கண்ணீர் சிந்தி வளர்த்த என் காங்கிரசைக் காப்பாற்ற வேண்டுமே என்கிற உண்மை ஆர்வத்தால் தான், அப்படியெல்லாம் பேசினேன் — 'இடியோசை' யெனப் புகழப்பட்டேன். இனி, எது செய்தாலும், காங்கிரஸ் உருப்படாது! 'கதர்' ஏழையின் இடுப்பிலிருந்து, 'கார்காரர்'களின் உடலுக்குப் போயிருப்பதுபோல, கட்சியும் போய்விட்டது!! இந்தநிலையில், எனக்கேன், அந்தக்கதர்? அந்தக் கட்சி? சிரிக்கமாட்டீர்கள் என நினைக்கிறேன்—என் நிலையைப் பார்த்து. விடுதலை இயக்கங்களின் வரலாறுகளை உணர்ந்த நீங்கள் உண்மையில், எனது நிலையை அனுதாபத்தோடு பார்ப்பீர்கள் என நம்பியே, இந்தக் கடிதத்தை எழுதினேன்—கண்ணீர் தான், நீங்கள் காணும் 'இங்கி'.

இப்படிக்கு,

**'இடியோசை' — ஏழுமலை**

---

# தென்னிந்திய நடிகர் சங்க வேண்டுகோள்

**தமிழ்ப் பெருமக்களே!**

டில்லியில் நடைபெறப் போகும் தேசிய நாடக விழாவுக்காகத் தமிழ் நாட்டின் சார்பில் பிரதேச நாடக விழா நடத்தப்பட்டு சிவகாமியின் சபதம் முதல் தரமான நாடகம் என்ற முடிவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த நாடகம் தமிழ்நாட்டின் சிறந்த நாடகம் என்ற பெயருடன் டில்லியில் நடைபெறவும் போகிறது. தமிழ்க் கலைஞர்கள் கலந்துகொள்ள முடியாத நிலைமையை உருவாக்கி நடைபெற்ற இந்தப் போலி நாடக விழாவைத் தடுத்துத் தமிழ் நாடகக் கலையின் கௌரவத்தைக் காப்பாற்ற நாங்கள் எவ்வளவோ முயற்சித்தோம். அறிக்கைகள் விடுத்தோம். அதிகார பூர்வமாக வாதாடினோம். பயனில்லை. தமிழ் நாடக விழாவை நாடகமாகவே நடத்தி முடித்துவிட்டார்கள்.

**ரசிகப் பொதுமக்களே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?**

இந்தியாவிலேயே இன்று நாடகக்கலை வளர்ச்சியில் முன்னணியில் நிற்கும் நமது தமிழ் நாட்டிலிருந்து "கிருபா அமைச்சூர் குழுவினர்" நடித்த "சிவகாமியின் சபதம்" சிறந்த நாடகம் என்று டில்லி தேசிய நாடக விழாவுக்கு அனுப்பப்படுகிறது.

**இதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா ?**

ஆங்கிலேயர் அரசாண்ட காலத்தில் அடிமை நாட்டில் அரும்பாடுபட்டுக் காலமெல்லாம் தமிழ் நாடகக்கலை உயர்வுக்காக உழைத்த உத்தமப் பெரியார்களையும் கலைஞர்களையும் புறக்கணித்துவிட்டு, சுதந்திரத் திருநாட்டில் சர்க்கார் ஆதரவு, வெளிநாடுகளுடன் கலாசார உறவு, உபகாரச் சம்பளம், பரிசு என்ற பெயர்கள் அடிபடும் காலத்தில் கலையின் பேரால் புல்லுருவிகள் தோன்றி இடம்பிடித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

**இதற்கு உங்கள் தீர்ப்பு என்ன ?**

இந்த முடிவு தமிழ்க் கலைஞர்களை மட்டும் பாதிப்பதல்ல. வளர்ந்து நிற்கும் தமிழ் நாடகக் கலையின் மானத்தையும் தமிழ் நாட்டையும் பாதிப்பதாகும். இந்த நிலைமையில் தமிழ் நாட்டின் ஒன்றுபட்ட கண்டனக் குரல் எழாவிட்டால், "இதுதான் தமிழ் நாடகத்தின் தரம்" என்று டில்லியிலே முடிவாகிவிடும்.

எனவே,.........நகர சபைகள், மாவட்டக் கழகங்கள், நாடக சபைகள், பொதுநலச் சங்கங்கள், பத்திரிகைகள், பேராசிரியர்கள், பொது மக்கள், எல்லோரும் எவ்வித வேற்றுமையுமின்றி இதற்காகக் கண்டனக் குரல் எழுப்பவேண்டும் "சென்னை பிரதேச விழாவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகம் எங்கள் தமிழ் நாடகக் கலையின் உயர்வை உண்மையாய் அறிவிப்பதல்ல; பிரதேச நாடக விழாவில் தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற கலைஞர்கள் எவருமே கலந்துகொள்ள முடியாமல் ஏதேச்சாதிகாரமாக நடத்தப்பட்டது. இந்த முடிவை நாங்கள் கண்டிக்கிறோம்" என்று தீர்மானம் நிறைவேற்றி,

"General Secretary
Sangeet Natak Akademi,
9, Queensway, New Delhi"

என்ற முகவரிக்கும் சென்னை சர்க்காருக்கும் அனுப்பிவைத்து தமிழ் நாட்டின் மானத்தைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறோம்.

தலைவர்: **டி. வி. சுந்தரம்**

செயலாளர்கள்: **எம். ஜி. ராமச்சந்திரன், டி. என். சிவதாணு.**

தொடர் சித்திரம்

# கடிகாரம்

## 3

[அண்ணா]

ஒழுங்காக ஒரு கடிகாரத்தை ஓடச் செய்ய இவ்வளவு ஆராய்ச்சிகள் தேவைப்படுகின்றன — பெரிய பெரிய நிபுணர்களையெல்லாம் வைத்து கடிகாரக் கம்பெனியார் கவனிக்கிறார்கள். எதற்கு? தங்களது கம்பெனியின் பெயர் கெட்டுவிடக்கூடாது என்பதற்கு. ஒரு கம்பெனிக்கு, தாங்கள் உற்பத்தி செய்யும் கடிகாரத்தின்மீது இவ்வளவு சிரத்தை இருக்கிறதென்று சொன்னால், கடிகாரத்தைவிட மிகவும் மேலான மனிதர்களை வைத்துக் காப்பாற்றும் ஒரு சர்க்காருக்கு எவ்வளவு பொறுப்பிருக்கவேண்டும்? கடிகாரத்தைவிட இழிந்தவனா, மனிதன்? அவன் இந்த நாட்டின் உயிர் வாழ, எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது. கஷ்டமில்லாத வாழ்க்கையைத் தர, அவனுக்காக ஆராய்ச்சி நடத்த யார் இருக்கிறார்கள்? அந்த ஆராய்ச்சிக்காக, அரசாங்கம் உதவிசெய்ய முன் வருகிறதா? ஏழையும் இல்லாதவனுமற்ற சமுதாயம் நிறுவப்படவேண்டுமென்று கூறுவோரை, குத்திட்டி கொண்டல்லவோ, பாய்ந்து அடிக்க வருகிறது, அரசு! இத்தகைய ஆராய்ச்சி நடத்தப்பட்டிருந்தால், வரதன், ஏன் திருடனாக வேண்டும்? காசில்லாததால்தானே வள்ளி வைத்திருந்த கடிகாரத்தை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்திருக்கிறான்!

வள்ளிக்கு ஏது இந்தக் கடிகாரம்? காசுக்கு ஆசைப்பட்டு கற்பை விற்றிருப்பாள், மருதவாணருக்கு; அல்லது காதலியாக இருந்திருப்பாள்! இரண்டுமில்லையென்றால், திருடிக்கொண்டு வந்திருப்பாள்!

ஏன் திருடவேண்டும், இவர்கள்? காரணம், 'இல்லாமை'தானே. உலகத்திலேயே மிகப் பொல்லாத 'ஆமை' எது என்று, அன்றொரு நாள், நான் கேட்கப்போயிருந்த புராண காலட்சேபத்தில், கிருபானந்தவாரியார் கேட்டார் — பிறகு அவரே பதிலும் சொன்னார், 'உலகத்திலேயே மிகவும் பொல்லாத ஆமை—பொறாமை' என்று. உண்மைதான்; பொறாமை பொல்லாதது தான். ஆனால், அந்தப் பொறாமை முளைக்கக் காரணம் என்ன? நீங்களே சொல்லுங்கள், என்ன காரணம்? 'இல்லாமை'தானாம், இதற்குக் காரணம். இந்த 'ஆமை' ஒழிந்துவிட்டால், இயலாமை—ஆற்றாமை—பொறாமை—எல்லாம் ஒழிந்துவிடுமாம். இந்த 'ஆமை'யை ஒழிப்பது யார்? இதற்கு வழி கூறிடும் நிபுணர்களுக்கு, இந்த நாட்டில் என்ன பட்டம் சூட்டப்படுகிறது!— 'பைத்யக்காரர்கள்' என்று பண்டித நேருவே சொன்னாராமே! போக பூமியில் புரளும் காதலன் காதலியைச் செல்லமாகக் கன்னத்தில் தட்டுகிறான்—'போடி பைத்யம்; என்று. கன்னக்கோலேந்திய திருடன், அஞ்சிடும் தோழனைப் பார்த்து, 'பைத்தியக்காரனைப் பார்த்தியா, பயப்படுகிறான்' என்கிறான். 'கர்மம், என் தலைவிதி, எனக்கென்று வாய்த்தாயே' என்று நீலியை மனைவியாகப் பெற்ற கணவன் தலையிலடித்துக்கொள்வதைப் பக்கத்து வீட்டுக்காரியிடம் காட்டி 'பைத்யத்தைப் பார்த்தாயா, இப்படித்தான் எப்பவும்' என்கிறாள். ஒவ்வொருவரும் பிறரைப் பழிக்கப் பைத்யம் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால், உண்மையான பைத்யங்களிடம் — எவ்வளவு உயர்தரமான உள்ளம் இருக்கிறது! என் எதிரில் அழுத கண்ணீருடன் சோகபிம்பமாக வந்து நின்ற "உண்மையில் கடவுள் உண்டோ! இல்லையோ!" பைத்யம்பட்ட பரிதாபத்தைக் கண்டபோது, எனக்கு இப்படிப்பட்ட பைத்யக்காரர்களின் மடமாக, இந்த உலகமே மாறிவிட்டால் என்ன? என்றுகூடத் தோன்றியது.

"சாமி! நேற்று கடிகாரம் கொண்டுவந்தானே —அவன் எங்கே இருக்கிறான்?"

"ஏன்? அவனிடம் மீண்டும் சண்டைக்குப் போகப்போகிறாயா"?

"இல்லை, சாமி! அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கவேண்டும், சாமி. அவன் யாரோ! நான் யாரோ!! பாபம், என்னால் அல்லவா போலீசில் அகப்பட்டுக் கொண்டான்"

"நீ ஏன், அவனிடம் சண்டைக்குப் போனாய்?"

"அந்தக் கடிகாரத்தைக் கண்டதும் என் புத்தியே மாறிவிட்டது சாமி"

"ஏன்? அப்படி என்ன இருக்கிறது, அந்தக் கடிகாரத்தில்!"

"என்ன இருக்கிறதா? அந்தக் கடிகாரம் யாருடையது தெரியுமா சாமி?"

"வரதனுடைய மனைவி தன்னுடையது என்கிறாள்—வழக்கை விசாரித்த மாஜிஸ்ட்ரேட்டோ தன்னுடையதென்கிறார்......"

"வழக்கா? அப்படியானால் அவனை ஜெயிலுக்குக் கொண்டு போய்விட்டார்களா?"

"ஆமாம்"

"ஐயோ சாமி! என்னைச் செருப்பால் அடித்தாலும் தகும், சாமி. அவனை, ஜெயிலிலே என்ன பாடுபடுத்துறாங்களோ...சாமி! அவன் மனைவியையுமா பிடித்துக்கொண்டார்கள்?"

"ஆமாம்"

"ஐயோ பாபம்!...சாமி, அந்தக் கடிகாரத்தைப்பற்றி, மாஜிஸ்ட்ரேட் ஏதோ சொன்னார் என்றீர்களே... என்ன சொன்னார்?"

"கடிகாரம் அவருடையதாம்"

**"என்ன? அவருடையதா! பொய் சாமி பொய்! கடிகாரம் என்னுடையது! என்னுடையது!!"**

கூவினான், அவன். திகைத்தேன் நான். இதென்ன புதுக் குழப்பம்—என்று எண்ணினேன். இவனைக் கேட்டாலாவது ஏதாவது விபரம் தெரியுமோ என்றெண்ணி விசாரித்தேன். அவன் விடை ஏதும் கூறவில்லை.

"சாமி! உங்க காலைப் பிடிச்சுக்கிறேன். எனக்கு ஒரு உதவி செய்யுங்க! எப்படியாவது ஜெயிலிலே இருக்கும் அவனை, நான் பார்த்துப் பேச ஏற்பாடு செய்யமுடியுமா—உங்களால்"

"எதற்காக நீ அவனைப் பார்க்க வேண்டும்?"

"அந்தக் கடிகாரம் அவனுக்கு எப்படிக் கிடைத்தது என்று தெரிந்துகொள்ளவேண்டும் —சாமி"

'அவன் மனைவி வைத்திருந்தாளாம்—அடுக்குப் பானையில்"

"அப்படியானால், அவனையும் பார்த்து, விபரம் தெரிந்துகொள்ள வேண்டும் சாமி—அந்தக் கடிகாரம் எப்படிக் கிடைத்தது என்று தெரிந்துவிட்டால்......"

"தெரிந்துவிட்டால்"

"இப்படி நான் திரியமாட்டேன். வாழ்வு அல்லது சாவு—அதை முடிவுசெய்துகொள்வேன்"

பைத்யம், மிகத் தெளிவாகப் பேசினான். "நாளைக் காலையில் வா—போய்ப் பார்க்க ஏற்பாடு செய்கிறேன்" என்று அவனைப் போகச் சொல்லிவிட்டு, ஜெயிலுக்குப் போக அனுமதி கேட்பதற்காகப் புறப்பட்டேன். அதற்கும் மாஜிஸ்ட்ரேட் அனுமதிதான் வேண்டுமாம். அவர் தான் படுக்கையிலிருக்கிறாரே, என்ன செய்யலாம் என்பதைக் கேட்பதற்காக **ஹெட் கான்ஸ்டேபிள்** மாணிக்கத்தைத் தேடிக்கொண்டு போனேன். இதுபோன்ற காரியங்களில், எனக்கு மாணிக்கம்தான் துணை. அவனும் எனக்கு உதவி செய்வதென்றால் தட்டாமல் செய்வான். அடிக்கடி, அவனுக்கும், என்னிடம் வரவேண்டிய நெருக்கடி ஏற்படுமே; வட்டிக்கடை செட்டியாரல்லவா நான். என்னிடம் வராதவர்கள்தான் இருக்கமுடியாதே! அவன், போலீஸ் ஸ்டேஷனிலிருந்தான். போய், விஷயத்தைச் சொன்னேன் — 'கடிகாரத்தின் கதை' வளர்ந்துகொண்டே போகும் விபரத்தைவிளக்கி. 'எப்படியாவது அந்தப் பைத்யத்துடன் வள்ளியையும் வரதனையும் சந்திக்க அனுமதிபெற்றாகவேண்டும்' என்று கேட்டேன். நான் கூறியதை, அமைதியோடு கேட்டுக்கொண்டிருந்த அவன், நான் எதிர்பாராத வெடியைத் தூக்கிப் போட்டான். கதை படித்து வரும் ஒருவருக்கு, கதை முடியப் போகிறது என்று கருதும் நேரத்தில், திடீரென்று திகைப்பு ஏற்படும்விதத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டால், எப்படியிருக்கும்? அதைப்போலாயிற்று, என்னுடைய நிலை. சிறிதும், எதிர்பாராத செய்தியைச் சொன்னான், மாணிக்கம். அவன், போலீஸ்ஹெட் கான்ஸ்டேபிள்—எனவே, எப்படி நம்பாமலிருக்கமுடியும்? திகைத்தேன், நான். என் மனதில் மீண்டும் குழப்பத்தை உண்டுபண்ணும் விதத்தில், அவன் என்ன தெரிவித்தான், தெரியுமா? **கடிகாரம், இவர்கள் யாருடையதும் அல்லவாம்! சிங்கார மடத்துக்குச் சொந்தமானதாம்!** (வளரும்)

# "ரோஜாப்பூ, சேலைக்காரி!"

"பூப்போட்டசேலை! அதுவும் எப்பேற்பட்ட, பூ? கண்டோரை மயங்க வைக்கும் ரோஜாப்பூ!! அந்தச் சேலையைக் கட்டிக்கொண்டு, சிங்காரமாக வந்து நிற்கும்போது — அடடா! — என் ஆவியெல்லாம் அவள் காலடியில் போய் சரணாகதி அடைகிறது" என்று தில்லானா பாடிடும் திம்மப்பன், சில நாள் கழித்து, அந்த 'சேலைக்காரி'யைச் சந்தித்த பிறகு—சோர்ந்த முகத்துடன் வந்தான் என்னிடம்,

"என்ன, திம்மப்பா, சேதி?"

"வெட்கமாயிருக்கிறதப்பா, சொல்ல.........!!"

"அப்படித்தானிருக்கும் — பிறரிடம் சொல்ல. பரவாயில்லை, சொல்லு"

"அவள்......"

"அவள்......?"

"பெண்ணல்ல!"

"பிறகு......?"

"அலி! ஆண் உருவமுள்ள அலி!!"

பச்சைக் கொடியா! பச்சைப் பாம்பா!! — என்று கண்டறியாத வயது. இளமைத் தாகம்! ஏமாந்தேன்—என்று, வந்துநிற்கிறான், என்னிடம்! திம்மப்பனைக் காணும் உங்களுக்கு, எப்படியிருக்கும்? அவனுக்குத்தான், மற்றவர்களிடம், இந்தச் செய்தியைக் கூற எப்படியிருக்கும்!!

*

திம்மப்பன் நிலைக்கு, தேசம் வந்திருக்கிறது, இன்று. ஏற்றிப் போற்றி, இந்த 'ரோஜாப்பூ சேலைக்காரி'யைப்போலுண்டா என்று புகழ்மாலை சூடியோரெல்லாம், வாய்மூடி மௌனியாகி வேதனைக்கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறார்கள்.

"என்னப்பா, திம்மப்பா! காதலியின் கன்னங்களைப்பற்றிப் புகழ்ந்தாயே, எப்படியிருக்கிறது இப்போது?"

"என்னப்பா! இல்லத்துராணியானதும், இப்படியிருப்போம் அப்படியிருப்போம் என்று கூறினாயே, எப்படியிருக்கிறாய், இப்போது?"

"போய்ப் பார்த்துவிட்டு வந்தாயே, உன் போகசுந்தரி என்னப்பா சொன்னாள்?" — என்று எதிர்க்கட்சிக்காரர்கள் பார்த்துக் கேட்கக் கேட்க, 'திம்மப்பர்கள்' திகைக்கிறார்கள்; பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறார்கள்.

அலியை, ஆருயிராள் என்று நம்பியது தவறென்று தெரியும்போது, சண்டப்பிரசண்டமா செய்ய முடியும்? வேண்டுமானால், முஷ்டியைத் தூக்கிக்கொண்டு, "முட்டாளே! உனக்கென்னடா?" என்று பாயலாம்—ஓங்காரக் கூச்சலிட்டு சண்டைக்குச் செல்லலாம். "இல்லை இல்லை, அவள் பெண்தான்; என்னை அணைத்தாள்; இன்பம் தந்தாள்; இருவரும் திருமணம் செய்துகொள்ளப்போகிறோம். சாகும்வரையில் நானும் அவளும் ஈருடல் ஓருயிராவோம். சேதி தெரியுமா உனக்கு? சீக்கிரம் எங்கள் அன்பின் சின்னம் கூட, தொட்டிலில் தூங்கக் காணலாம், நீ" என்று சொல்லவா முடியும்! சொன்னாலும், கேலிதானே செய்வர், கேட்போர்! இந்தக் கேலி என்ன ரதகஜ துரகபதாதிகளைக் கூட்டி வருமா—நாங்கள் ஏறிச் செல்லும் காரைத் தடுத்து நிறுத்துமா—எங்களைக் கண்டு அஞ்சிடும் அதிகாரிகளின் கையையும் நாவையும் கட்டிப் போட்டுவிடுமா — என்ன செய்யும் எங்களை, என்ற எண்ணத்துடன், 'விரைவில் எங்கள் அன்பின் சின்னத்தைக் காணலாம் நீங்கள்' என்று சண்டப்பிரசண்டம் செய்யும் 'சன்மார்க்கசீலர்'களும் இருக்கிறார்கள், இங்கே! அவர்கள், தலைவர்கள்!

ஆனால், தொண்டர்களும், அவர்களை நம்பிய மக்களுமோ, 'நம்பி ஏமாந்தோமே' என்று, மெல்லவும் முடியாமல், சொல்லவும் கூடாமல் திகைக்கிறார்கள்.

"எதிர்க் கட்சிக்காரர்கள் கூறுவது, உண்மையாகத்தானே இருக்கிறது"

"இல்லாததையா சொல்லுகிறார்கள்—தி. மு. க.வினர்".

"எப்படி எப்படியெல்லாம் வர்ணித்தோம், இந்தக் காங்கிரசை"

"காங்கிரசின் பிடியில் நாடு வந்துவிட்டால், பிறகு......" என்று எவ்வளவு ஆவலோடு, எதைஎதைப் பற்றியெல்லாம் கனவு கண்டோம்.

"உத்தமா! உதாரா! உங்களுக்காகவன்றோ நாங்களிருக்கிறோம்"

என்று எவ்வளவு ஆசையோடு எங்களிடம் பேசினர், காங்கிரஸ் தலைவர்கள்.

நாமும்தான் அந்த மகிழ்ச்சியில் "ஆபத்துப் போக்கும் தியாகிகளே! விடுதலை பெற்றுத் தரப் போகும் வீரர்களே, எங்கள் கண்களே! இதயத்தில் வீற்றிருக்கும் மாணிக்கங்களே!" என்று எவ்வளவு வர்ணித்தோம்.

இவ்விதம் ஏங்குகின்றனர், மக்கள்—நாடு போகும் நிலையைக் கண்டு.

இதனை, நாம் எடுத்துக்காட்டும் போது, 'உண்மைதானே' என்று பெருமூச்சால் பேசுகிறார்கள், காங்கிரஸ் தொண்டர்கள்.

இந்தத் 'திம்மப்பர்களைக் காணும் போது, உண்மையில் நமக்கு அனுதாபமும் வருத்தமும் இல்லாமலில்லை. நாடு, கனிமரக் காவாகி, இன்பம் குலுங்கவும், மணம் கமழவும், மாற்றாரும் உற்றாரும் மனமகிழுமான நிலையிலிருந்தால் — அந்த நாட்டைக் கண்டு, "ஐயோ! இப்படியாகிவிட்டதே!" என்று எரிச்சல் கொள்ளும் மந்தமதியினரல்ல நாம். மல்லிகை, காங்கிரஸ்காரர் வைத்தது என்பதால், மணமில்லை எனக் கூறும் சிந்தை மதி கொண்டதல்ல தி. மு. க. சாதாரண கனகாம்பரமாயினும்கூட, அதனால் கள்ளியும் முள்ளும் படர்ந்து கிடந்த இடம் சுத்தமாகியிருக்கிறது எனக் கண்டால், அதற்காக, அவர்களைப் பாராட்ட நாம் தயங்கியதே கிடையாது. மதுவிலக்கு போன்ற விஷயங்கள் அமுலுக்கு வந்தபோது, மகிழ்ச்சியும் மலரும் குவித்தோம்—அவர்களுக்கு. நாம்மட்டுமல்ல, நாடு வாழவேண்டும் என்கிற பொதுநோக்கம்கொண்ட எவரும், நன்மைகள் மலரும்போது மகிழவே செய்வர். "நன்மைகளைச் செய்தது காங்கிரஸ்—ஆகவே, அதற்கு ஒரு புது வியாக்கியானம் செய்யவேண்டும்" என்கிற ஜாலசக்தி பாதை, நமக்குப் பிடிக்காததுமட்டுமல்ல—அது பாதையா என்கிற சந்தேகம் உண்டு நமக்கு. அதனால்தான், திகைக்கும் திம்மப்பனைப்போல தென்படும் நாட்டையும், காங்கிரஸ் தொண்டர்களையும் சந்திக்கும் போது, இதயபூர்வமாக வருந்துகிறோம்—ஏமாந்தனரே என்று பரிதாபம் கொள்கிறோம்.

ஆனால், தலைவர்களோ, ஏமாற்றத்தை மறைக்க, அலியை அழகியென்றே கூறுகின்றனர். ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு......! என்று, ஆவலோடு தெரிவிக்கின்றனர். பிறகு பாரீர், எமது பெருமையை — என்று பேசுகின்றனர். அதோ அணை—இதோ தேசிய நிர்மாணம் என்றெல்லாம் வர்ணிக்கின்றனர். அவைகளைப்பற்றிய ஓட்டை உடைசல்களை எடுத்துக் காட்ட நம்போன்றோர் முன்வந்தால் 'முஷ்டி'யை ஓங்கிக்கொண்டு. விட்டேனா பார் என்று கர்ஜிக்கின்றனர்.

அவர்கள் கூறிடும் அந்தனை 'ஆசைகளையும் கவனமாகப் பார்க்கிறோம் — கண்ணீரோடு நிற்கும் நாட்டையும் காணுகிறோம்—எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பதும் விளங்குகிறது, நன்றாக. அந்த வேதனையினாலேயே விசாரத்துடன் சொல்லிவருகிறோம், "காங்கிரசால் எந்தக் காரியத்தையும் ஒழுங்காகச் செய்யமுடியாது" என்று.

'ஆமாம்போலும்' என்று மக்களும் எண்ணத் தொடங்கிவிட்டனர். 'அப்படித்தான் போலும்' என்று காங்கிரஸ் தொண்டர்களுக்கும் சந்தேகம் உண்டாகி வருகிறது இந்நாளில். இவைகளைக் காணும் தலைவர்களோ, தவறுகளை மறைக்க 'எதிர் காலத்தை' அழைக்கின்றனர்—காதலின் பலன் விரைவில் தொட்டிலில் தெரியும்—என்று நம்பிக்கையூட்டுகின்றனர்.

**இந்தியா, புதிய யுகத்தை உண்டாக்கப்போகிறது.**

**ஜனநாயகத்தின் சின்னமாகத் திகழப் போகிறது.**

**கோட்டையைக் கட்டுகிறோம்.**

என்று வானளாவப்பேசுகின்றனர். வானொலியும் ஏடுகளும் அனுதினமும் முழக்கமிடுகின்றன.

அப்படியாவதற்கான, அறிகுறி தென்படுகிறதா?—ஏமாந்த திம்மப்பன், திகைக்கிறான். தேசமும், கட்சித் தொண்டர்களும், சஞ்சல முகத்தோடு காட்சி தருகிறார்கள். எதிர்க்கட்சிகளோ, அந்த நிலை வரும் அறிகுறியே காணோமென்று, அனுதினமும் தெரிவித்து வருகின்றன.

"எதிர்க்கட்சியினர் எனவே, இப்படிச் சொல்லுகிறார்கள்......"

"தேசப் பிரிவினையே, தி. மு. க. வினர் நோக்கம். எனவே சொல்லுகிறார்கள் இப்படி........" என்று காங்கிரஸ் தலைவர்களின் பிரச்சார பீரங்கிகள்; நம்மீது பழியை வீசுகின்றனர். எதிர்க்கட்சிதான் நாம். ஆனால், எதிரிகளல்ல, இந்த நாட்டின் நல்வாழ்வுக்கு.

புதுயுகம் பூக்கச்செய்வோம்—எனக் கூறும், காங்கிரஸ் புனிதர்களின் போக்கைப் பாருங்கள். நன்மைகள் மலரவில்லை—என்பது ஒருபுறம், இருக்கட்டும். சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டின் வாழ்க்கையை அவர்கள் கொண்டு செல்லும் பாதையை நோக்குங்கள்... நாட்டிற்கு நன்மை வழங்கும் ஏற்பாடுகளைச் செய்து வருவதாகச் சொல்லுகிறார்கள், ஒரு பக்கம். தாமோதரையும் சித்திரையும் காட்டுகிறார்கள். அதே நேரத்தில், பார்லிமெண்டில், மனித உரிமைகளை மாய்க்கும் சட்டத்தையும் நிறைவேற்றுகிறார்கள்.

**தடுப்புக் காவல் சட்டம்.**
**பத்திரிகையாளர் சட்டம்.**

ஆகியவைகள், பார்லிமெண்டிலே, வந்து, ஒருகட்டம் முடிந்து போயிருக்கிறது, அண்மையில்.

யாரையும் பிடித்துச் சிறையில் போடலாம் என்பதே — காவல் சட்டம்.

சர்க்கார் ஊழல்களை விளக்கும் ஏடுகள்மீது நடவடிக்கை தொடரலாம்—என்பதே, பத்திரிகைச் சட்டம்.

இந்த இரண்டு சட்டமும், ஏன்? இவை, மனிதனின் கைக்கும், காலுக்கும் விலங்கு பூட்டும் நடவடிக்கைகள் என்று கண்டித்திருக்கின்றனர், நல்லோர். சுதந்திர அரசில், மனிதர்களை, வாயில்லாப் பிராணிகளாக்கும் செயலை எவரும் விரும்பமாட்டார்கள். அந்த வேதனை, தேவையாம். அதற்காகச் சட்டமாம். இந்த நிலையில், புதுயுகத்துக்குப் பாதை அமைக்கிறார்களாம்!!

ஆந்திராவில், பிரகாசம் ஆட்சி கவிழ்ந்தது—மெஜாரிட்டி எம். எல். ஏ-க்களைக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியை அழைத்து ஆட்சிப் பொறுப்பை அளித்திருக்கவேண்டும் கவர்னர்—அப்படிச் செய்யவில்லை. சட்ட சபை கலைக்கப்பட்டு, விரைவில் பொதுத் தேர்தலாம். அதிலும் அடுத்த பொதுத் தேர்தல் வர, ஆண்டு இரண்டுகூட, இல்லை—இடையில். இப்போது, மற்றொரு தேர்தலாம், இதற்கான மசோதாவும், பார்லிமெண்டில், கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(அடுத்த பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 28—11—54 [ஞாயிறு

# கராச்சி 'காட்சி'

★

'சிந்து' மாணவர்கள், கராச்சியின் வீதிகளிலே, கிளர்ச்சி முழக்கம் செய்தனராம், பாகிஸ்தான் பிரதமரின் போக்கை எதிர்த்து. அவர்கள்மட்டுமல்ல, மேற்குப் பாகிஸ்தான் முழுமையும், கடந்த சில நாட்களாக அதிருப்தியும் ஆவேசமும் உருவாகியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. பஞ்சாப்–சிந்து–பலுசிஸ்தானம்–எல்லை என்று பல மாகாணங்களாகப் பிரிந்திருந்த மேற்கு பாகிஸ்தானை ஒரே நாடாக ஆக்குவதென்று பிரதமர் முகம்மது அலி அறிவித்திருக்கிறார். ஆறுகோடி மக்களைக் கொண்ட கிழக்கு வங்காளம் ஒரே நாடாக இருக்கும்போது, அதைவிடக் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட மேற்கு பாகிஸ்தானில்மட்டும் ஏன் இத்தனை மாகாணங்கள்?— என்ற கேள்வியையும் கேட்டுள்ளார். இது, அவர் பிறந்த இடமான கிழக்கு பாகிஸ்தான் மக்களுக்குத் திருப்தியைத் தரலாம்! ஆனால் மேற்குப்பாகிஸ்தான்......!! அதன்அறிகுறியே, சிந்து மாணவர்களின் கிளர்ச்சி.

மறைந்த மாவீரர் ஜின்னா, உலகப் படத்திலே, ஒரு புது நாட்டைச் சிருஷ்டித்தார்—அதனை அவரது தோழர் லியாகத்அலிகான் கட்டிக்காத்தார்—ஆனால், அவருக்குப் பிறகு, அங்கே, ஆடிடும் ஊஞ்சல்போலிருக்கிறது அரசு. ஆண்டு ஏழாகியும், இன்னும் ஓர் அரசியல் தயாரிக்கப்படவில்லை—அரசியலமைப்புச் சபையும் கலைக்கப்பட்டுவிட்டது. நெல்லிக்காய் மூட்டையைப்போல் நிலை குலைந்துவிட்டது, முஸ்லிம் லீக். மனக் குழப்பமும், கசப்பும் அதிகமாகி வருகிறது மக்கள் மன்றத்தில். காரணம், புது நாட்டைக் கண்ட அவர்கள், புது அரசுப் பாதையையும் வகுக்கத் தவறிவிட்டார்கள். பழைய பாதையும், அரசுக் கட்டிலில் அமரக் கிடைத்ததுதான் இந்த நாடு-என்கிற எண்ணமும், அங்குள்ள தலைவர்களிடையில் அதிகமாகி விட்டது. அங்கிருக்கும் நிலைமையை அறியும் இங்குள்ள தேசீயப் பீரங்கிகள், தெந்தினா பாடுகின்றன! 'பிரிவினையின் பலன்......'' என்றும் பேசுகின்றன. பிரிவினையால் ஏற்பட்ட பலன் அல்ல, இது; பெற்ற நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கும் அரசியல் திட்டம் இதயத்தில் இல்லாததின் விளைவாகும் இது. அடிக்கடி, கிழக்கு பாகிஸ்தானுக்கும்-மேற்குப் பாகிஸ்தானுக்குமிடையில் மனக்கசப்பு வளர்ந்தே வருகிறது. அதனை, இந்நடவடிக்கை குறைக்கும் என்கிற கருத்தில்தான், பாகிஸ்தான், புது அறிவிப்பைச் செய்திருக்கிறது. ஆனால், அறிவிப்பைக் கேட்டதும், கிளர்ச்சியும் அரும்பியிருக்கிறது.

அந்த மக்களையெல்லாம் குரல் கேட்டதும் மயக்கிடும், தலைவர் ஒருவரும், அங்கே இல்லை. அந்தக்குறை, பாகிஸ்தானின் பெரிய குறையாகும்! அதே நேரத்தில், வெள்ளையன் வைத்த அரசியல், அப்படியே இருக்கிறதே யொழிய, ஏழையும் கோழையும் வாழச் செய்யும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இதனால், ஆடுகிறது, நாடு! இந்நிலையில், இந்த அறிவிப்பு!!

இனம் ஒன்றானாலும் பலமொழி பேசும் மக்களின் கூட்டாட்சி என்றால் அந்தந்த மொழிவாரி மக்கள், தத்தமது மொழி ஆட்சிபுரியும் ஒரு அரசில் வாழவேண்டுமென்கிற வேட்கை அதிகரித்திருக்கிற காலம்—இது, அதனால்தான், திராவிட இன மக்கள் எல்லாம் ஒன்று கூடி அமைக்கவேண்டுமெனக் கூறும் தென்னரசு—திராவிடக் குடியரசு — ஒரு கூட்டாட்சியாக இருக்கவேண்டும் — அதிலே, தமிழகமும், ஆந்திரமும், கேரளமும், கன்னடமும் சுதந்திர 'யூனிட்'டுகளாக விளங்க வேண்டும், என்று வலியுறுத்தி வருகிறோம், நாம்.

இந்த நேரத்தில், 'கராச்சி' பல கோடி மக்களை, ஒரே அரசாக்க விரும்புகிறது! அரசியல் அமைப்பில், கூட்டாட்சி (Federal) ஐக்கிய ஆட்சி (Unitary) என இருவகையுண்டு. இப்படி மாகாணங்களின் அதிகாரங்களை 'மத்யம்' எடுத்துக்கொள்வதற்குப் பெயர், ஐக்கிய ஆட்சியாகும்! அதனால்தான் இந்திய யூனியன் என்றும் இந்த உபகண்டத்தை அழைப்பதுண்டு!! ''இந்த ஆட்சி முறை கேடு பயப்பது'' என்று ஐவார் ஜென்னிங்ஸ் போன்ற அரசியலமைப்பு அறிஞர்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றனர். இருந்தும், அதே பாதையில் செல்லுகிறது, பாகிஸ்தான்! ஐக்கிய ஆட்சி, தங்கு தடையின்றி நடைபெற வேண்டுமானால், எல்லாமக்களும் ஏற்கக் கூடிய ஒருவரின் தலைமையிருக்கவேண்டும். இது, சாத்தியமே அல்ல!! அப்படிப்பட்ட தலைமையைப் பெற்றிருக்கும் இந்தியாவிலேயே, 'பண்டிதநேருக்குப் பிறகு.........யார்?' என்கிற கேள்வி எழும்பிவிட்டது.... இந்நிலையில், விடுதலை வீரர்களான காயிதே அஃலம் ஜின்னாவையும் காயிதேமில்லத்-லியாகத்தையும் இழந்து, தள்ளாடி நிற்கும் அங்கே. இது எப்படி. சாத்யமாகும் என்கிற ஐயத்தை உண்டாக்குகிறது.

அதிகாரங்களைக் குவித்துக்கொள்வது, என்றும் ஆபத்து. பல மொழி மக்களை அடிமைப்படுத்தி, ஒரே வலையில் போட்டடைப்பதும் சாத்யப்படாது. இந்த நிலையில், 'பாகிஸ்தானின் புது அறிவிப்பைக் கேட்போர்; 'எதிர்காலம் எப்படியோ' எனறு சந்தேகப்படவே செய்வர்.

★

(முன் பக்கத் தொடர்ச்சி)

'இதெல்லாம், புதுயுகப் பாதைகளா.

அவர்கள் கூறுவதைப்போல, 'அலியின் வயிற்றில் குழந்தை பிறக்கட்டும்' திம்மப்பன் தேடியவள் தித்திக்கும் இதழ்வல்லியாகத் திடீரென மாறிவிட்டாள் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தையின் மழலையையும் நடையையும் கண்டு அனுபவிக்கவேண்டியோரது, கைக்கும் காலுக்கும் விலங்கிட்டு, சிறைக் கூண்டுக்குள் தள்ளும் சட்டமும் கூடவே வருகிறதென்றால், என்ன பொருள். தங்களாட்சியை எதிர்க்கும் எவருக்கும், நாட்டில் இடமில்லையென்றுதானே, அர்த்தம். இந்த 'வெறி' காங்கிரஸ் தலைவர்களுக்கேன், வரவேண்டும்?

தேசம், நன்மைகள் மலரவில்லையே என்று திகைக்கிறது.

அந்தத் தேசத்தில் விழிப்பை உண்டாக்கிய தொண்டர்களோ, காங்கிரசின் போக்கைக் கண்டு விழிக்கிறார்கள்.

அந்தத் தொண்டர்களுக்கு, ஐந்தாண்டுத் திட்டத்தையும், அதை இதையும் காட்டி — அலியிடம் குழந்தை எனக் கூறும் தலைவர்களோ இப்படியெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். காவல்சட்டமாம்—பத்திரிகைச் சட்டமாம்!

'ரோஜாப்பூ சேலைக்காரி'யை நம்பிக் கெட்ட திம்மப்பர்களை, அனுதினமும் சந்திக்கும் நீங்களே சொல்லுங்கள்—அவளது ஆசை, நாட்டு நலமா? சொந்த இரும்புப்பெட்டியா? எது என்பதைக் கேட்கும் எதிர்க்கட்சிகள் மீது எரிச்சல்கொள்ளுவோரே—நீங்களே சொல்லுங்கள்—எங்கே போகிறாள், அவள்! இன்பம் கிடைக்குமா அவளிடமிருந்து!! ஏமாந்தபின்னும் அவளை நம்புவது நல்லதா?

★

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தி. வெடித்துவிட்டது என்கிற பேச்சு– வெளுத்துவிட்டான் – என்கிற விருது. தப்புவது கடினம், நிச்சயம் வெளியேற்றப்படுவான் – என்கிற நம்பிக்கை, நாடு முழுமையும் – மக்களிடமல்ல–மக்களை எத்தி வாழும் மாளிகைகளில் பேசப்பட்டது, 1947ல்.

ஏட்டாளனும், சமயம் பார்த்து, தக்க 'கூர்வாளை'ப் பாய்ச்சினான், அவன் மீது.

இவனுக்கென்னய்யா—என்று ஆரம்பித்தான்.

நடித்துவிட்டுப் போகவேண்டியவனுக்கு நாட்டுப் பிரச்னையில் என்னய்யா, வேலை?—என்று ஆரம்பித்தான்.

கிளர்ச்சியல்லவா செய்யத் தூண்டுகிறான்—என்று வீசினான், எழுத்துக்களை.

சக நடிகர்களைவிட்டு அல்லவா சண்டையை மூட்டுகிறான்—என்று கோபக்கனலை அள்ளி வீசினான்.

நகைச்சுவை நடிகன் இருக்குமிடமோ, அமெரிக்கா; ஆனால், அவன் கிளர்ச்சி செய்யச் சொல்லிய இடமோ, பாரிஸ்! அங்கே இருக்கிற நடிகமணிகளுக்குத் தந்தி கொடுத்து, அமெரிக்கத் தூதராலயத்துக்குமுன் கிளர்ச்சி செய்யச் சொன்னான்.

குற்றம்தானே இது – என்று கூறுதோரில்லை.

என்ன இருந்தாலும், இன்னொரு நாட்டில் இப்படிச் செய்யத் தூண்டக் கூடாது—என்றனர், பலர்.

அவனோ, அவர்களைப் பார்த்துக் கேட்டான்—"நான் நடிகன்; மனிதன். எனக்கு இந்தத் தரையெல்லாம், தொட்டில்தான். எங்கெங்கு என்போன்ற ஏழைகள் இனம் இருக்கிறதோ அவர்களெல்லாம் என் தோழர்கள். என்னுடைய இனத்தில், யாருக்காவது ஒருவருக்கு, துரோகம் இழைக்கப்பட்டாலும், அவர்கள்தான் எனக்குத் துணை. அதனால் கிளர்ச்சி செய்யச் சொன்னேன். இனியும் சொல்வேன். எனக்குப் புத்திமதி கூற வருகிறீர்களே—நீங்கள் செய்யும் காரியம் சரியா?"

உண்மையில், அமெரிக்க அரசாங்கம் செய்யும் காரியத்தை, மனிதாபிமானமுள்ள எவரும் சரியென ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

ஒருவனை, தேசத்தைவிட்டுத் துரத்துமாறு, உத்தரவிட்டிருந்தனர்.

அவன் செய்த குற்றம் என்ன? கொலை செய்தான் – கொள்ளையடித்தான் – நாட்டை, அராஜகக் காடாக்கினான்—நயவஞ்சகத்தைப் பரப்பினான்—நல்லதைக் கெடுத்தான்—என்பது அல்ல, அவன்மீது சாட்டப்பட்ட குற்றம்,

எழுதினான்!—எத்தனை விஷயங்கள் இல்லை, அமெரிக்காவில்? அருக்கு மங்கையரின் மலரடி, தருக்குடன் நடை பழகும் அவர்கள் திருவடி, சிங்காரித்துக்கொள்ளும் வகை, சிரிப்பிலே தொனிக்கும் கீதம், இவைகளைப்பற்றியல்லவா எழுதவேண்டும்? அவைகளையல்ல, அவன் எழுதுகோல் தீட்டியது!

பொதுவுடைமை மணக்கும் கீதங்களை!—பொறுக்கமுடியுமா, இதை? எனவே, வழக்கு! குற்றம்! தேசப் பிரஷ்ட முடிவு!!

"இது சரியா?" என்பதே, அந்நடிக மன்னனின் கேள்வி.

"சரியோ, தவறோ, இவனுக்கென்ன?" என்பதே, ஏட்டாளர்விட்ட கணை.

விளைவு! மாளிகைகளிலும், மன்மத விலாசங்களிலும் புகைந்துகொண்டிருந்த எரிமலைகள் வெடித்தன—ஆத்திரத்தை மூடிவைத்துக்கொண்டிருந்தோரெல்லாம் அவன்மீது பாய்ந்தனர்—அமெரிக்க காங்கிரசில் (காங்கிரஸ் என்பது அமெரிக்க சட்டசபை) ஒருவர் தாக்கினார், "இவனால் இந்த நாடே, கெடுகிறது! நாட்டின் கலாச்சாரத்தையும் புகழையுமே மண்வெட்டி மூடுகிறான்!! மனிதமிருகம், இவன். அநாகரீகக் கோணங்கி. இவன் படங்களை, உடனே, கடலில் வீசியெறிய வேண்டும். இளைஞர்கள், கண்ணில் பட்டால், நாகரீகயுகமே கெடும்!" என்பதாக. பல சங்கங்கள்! ஸ்தாபனங்கள்!! எங்கும் கண்டனம்—கேலி—எதிர்ப்பு, அப்பப்ப, ஒரு நடிகனுக்கு, இதுவரையில் அவ்வளவு ஆர்ப்பாட்டம் எங்குமே நடைபெற்றதில்லை!! அத்தகைய பெருமைக்குள்ளானவன்தான், உலகத் திரையில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் இலட்சிய நடிகன், சார்லி சாப்ளின்.

* * *

இலட்சியமாவது! புடலங்காயாவது!!

கூத்தாடி, கூறுவதோ, கொள்கைகளை?

நாடகம் ஆடியா நாட்டைத் திருத்த முடியும்.

சினிமா மூலமா சீர்திருத்தம் பரவும்?

என்றெல்லாம், இங்குள்ள சிலர் எழுதுவதோடு, அதற்கு ஆதாரம் தேடிடும் அவசரத்தில், 'ஆச்சாரியாரும் அப்படியே சொல்கிறார்!' 'ஜி. டி. நாயுடு செப்புவதும் அதுவே' 'லட்சுமணசாமியார் கருத்தும் இதுதான்' 'சங்கராச்சாரியார் கூட எங்கள் பாதையில் நடக்கிறார்' என்றெல்லாம் அலைந்து ஒடித் தேடி ஏசுகின்றனரல்லவா? இந்த ஓட்டை உடைசல்களை விட, வாய்ப்பும் வசதியுமிக்கோரின் எதிர்ப்பிலே நீஞ்சவேண்டியவனாகயிருந்தான்; சார்லிசாப்ளின்.

'ஹாலிவுட்'—திரையுலக சுவர்க்கம். அங்கே, அங்கம் காட்டிடும் அழகு வர்ணப் படங்களும், வீரம் கொப்புளிக்கும் சரிதச் சித்திரங்களும், பைபிளிலுள்ள பலரகமான கதைகளும், ஆடலும் பாடலும் நிறைந்த உல்லாசச் சித்திரங்களும், ஏராளமான பொருட்செலவில்' நூற்றுக் கணக்கான அளவில் தயாரிக்கப்பட்டு உலகெங்கும் அனுப்பப்படுகின்றன. அந்த பூலோக சுவர்க்கத்திலே, சார்லி, ஒரு விந்தையான ஆத்மா'

> "படத்தின் ஒவ்வொரு அடியிலும் என்னுடைய எண்ணங்கள், பிரதிபலிக்க வேண்டும், இதற்காகவே படம் எடுக்கிறேன்"

என்று தெரிவித்தான். ஆடலிலும் பாடலிலும், காட்சி ஜோடனைகளிலும், கண்கவர் ஆடைகளைப் புனைவதிலும், கட்டழகிகளின் உடல் வனப்பைக் காட்டுவதிலும், அந்த எண்ணங்கள் சென்றிருந்தால் ஆயிரத்திலே ஒன்று என்று கருதப்பட்டிருக்கும் அவனுடைய படங்கள். "இத்தகைய படங்கள் ஏராளம் இருக்கின்றன! எந்தப் படத்தை யெடுத்தாலும் கதாநாயகனும் கதா நாயகியும் வருவார்கள்—நடுவிலே வில்லன் தோன்றுவான்–அவனால் தொல்லைகள் உருவாகும்—அவைகளையெல்லாம் காதலன் தாண்டுவான்—கடைசியில் சுபமாகும்! இப்படிப்பட்ட கதைகளையல்ல, நான் விரும்புவது. சமூகத்திலே, 'வில்லன்'கள் ஏராளமிருக்கிறார்கள், படம் எடுத்தாடும் பாம்பினைப்போல! தேன் பூசி மெழுகிய நஞ்சினைப்போல!! அந்த 'வில்லன்'களை வெளிப்படுத்துவதே, என்னுடைய வேலை" என்று தெரிவித்தான். அந்தப் பெரும் பணியினைச் செய்யும் ஆற்றல் அவனிடம் இருந்தது! ஆற்றல் யாரிடம்தான், இல்லாமலிருக்கிறது? மிகப் பிரபலமான நடிகர்கள் பலர் உண்டு, இங்கே! நாடு வியக்கும் கண்ணசைப்பைப் பெற்ற கன்னியரும் உண்டு இங்கே!! ஆனால், அந்த ஆற்றலை புது மாடல் காருக்கும், 'பாஷனபிள்' வீடுகளுக்கும், இங்குள்ளோர் செலவழிக்கின்றனர். ஒரு கட்டம் வந்ததும், ஜோதி மறைந்து, துருப்பிடித்த விளக்காகி மறைகின்றனர்! ஆனால், சார்லி, தன்னுடைய ஒவ்வொரு படங்கள் மூலமும் உன்னதமான எண்ணங்களைச் சொன்னான்—சமூகத்தின் உயர் மாடிக்காரர்கள் வழங்கும் 'சபாஷ்!' பட்டத்துக்காக அல்ல! அது, அந்த நிமிஷத்தோடு மறைந்துவிடும் என்பதை அறிந்ததால், சாகாவரம் பெற்ற சலனப் படங்களை உண்டுபண்ணினான். அதனால்தான் அவனுக்கு அவ்வளவு எதிர்ப்பு உருவாயிற்று, அந்தக் குபேரபுரியில்! மாளிகைகளும், அரசு மண்டபங்களும், ஏட்டாளரும் இன்னபிறரும் மருண்டனர் அவனைக்கண்டு.

1936! 'மாடர்ன் டைம்ஸ்' எனும் பெயர் கொண்ட அவனுடைய சிந்தனைச் சித்திரம், வெளியாயிற்று. அப்பப்ப! அது கண்டு, அமெரிக்காவே அலறிற்று. ''நவீன இயந்திரங்களின் மீது வெறிகொண்டோர், எவ்வளவு பெரிய பித்தர்களாக இருக்கிறார்கள்'' என்பதுதான் அந்தப் படத்தின் சித்தாந்தம். இந்தக் கொள்கையைத் தீப்பொறி பறக்கும் பேச்சுக்களால், செப்பவில்லை அவன். தன் நடிப்பால்—தேர்ந்தெடுத்த கதையமைப்பால் தெரிவித்தான், நாட்டுக்கு. அவன் செய்த கேலிகளைக் கண்டு, விலா நோகச் சிரித்தனர். அந்தச் சிரிப்பு முடிந்ததும், ஒவ்வொருவரும் எவ்வளவு பெரிய விஷயத்தை அவன் சொல்லுகிறான் என்று சிந்தித்தனர். நகைச்சுவை ஆனந்தம் தந்தது. அதில், கருத்தும் இருக்கிறது எனக் கண்டபோது ஒவ்வொருவர் மனதிலும் எரிச்சல் ஏற்பட்டது. புகைச்சல் பரவிற்று.

> ''ஆகா! அவன் முதலாளித்துவம் ஒழியவேண்டும் எனச் சொல்கிறான். புதுமைக் கருத்துக்களைச் சொல்லுகிறான். கார்ல் மார்க்ஸ் காட்டிய வழியில் செல்லுகிறான்''

என்று, எதிர்ப்பு ஏற்பட்டது. சட்ட மன்றங்களிலே, வழக்குகள் தொடரப்பட்டன. 'என்னை வைத்து எழுதியிருக்கிறான்' என்போரும், 'என் ஆலையைக் கிண்டல் செய்திருக்கிறான்' என்று குறைபட்டோரும் ஏராளமாயினர், பிரபுக்களில். அவன், அவர்களில் யாரையும் தனிப்பட்ட முறையில் குறிக்கவில்லை. 'வேலைக்காரி'யில் வந்த வேதாசல முதலியார்கள், உலகத்தில் ஏராளம் உண்டல்லவா? அவர்களிலே ஒருவனைக் காட்டினான். அமெரிக்க 'வேதாசலங்கள்' விம்மி எழுந்தனர் — தன்னையே, சார்லி சித்திரித்திருப்பதாக எண்ணி. இதனால், அவன்மீது தாங்கொணாத ஆத்திரம் உண்டாயிற்று, மாளிகைகளில். படமோ, வெற்றிகரமாக ஓடுகிறது—மக்களிடையில். படத்தைப்பற்றியோ இங்குள்ள ஏடுகள், 'பராசக்தி'க்குச் செய்ததைவிட, ஆயிரக்கணக்கான அளவில், தூற்றல் பாணங்களைத் தொடுத்தன. அமெரிக்காவில், ஏடுகளின் எழுத்துக்களுக்கு மிகுந்த மதிப்புண்டு. எனினும், சார்லி அஞ்சவில்லை—ஐயோ, நமக்கேன் என்று மிரண்டு விடவில்லை.

> ''மாடர்ன் டைம்ஸ் - நவீன இயந்திர யுகத்தைத் தாக்கும் கதையல்ல. நவீன இயந்திரங்கள் ஒரு சிலரிடம் சிக்கி அவதிப்படுவதையே விளக்க முயன்றிருக்கிறேன். விஞ்ஞானம், வேதனை வளர்க்கும் புலிகளின் இரும்புப் பெட்டிகளைப் பெருக்கப் பயன்படுகிறது. இதனால், ஏராளமான மக்கள், வேலையற்றோராக வீதியிலே அலைய நேருகிறது. சமூகத்தின் இந்த ஆபத்தையே எடுத்துக் காட்டினேன். வேலையற்றோர்படும் அவதியைச் சித்தரிப்பதே 'புது யுகத்'தின் நோக்கம்''

என்று தெரிவித்தான். இந்தப் படத்துக்கு, அமெரிக்காவில்மட்டுமல்ல, ஐரோப்பா முழுமையும் எதிர்ப்பு ஏற்பட்டது. 'வேதாசலங்கள்' எங்கும் தானே இருக்கிறார்கள்—இந்தியாவில் மட்டுமா? அதைப்போல, முதலாளிகள் உள்ள இடமெங்கும் பலத்த கண்டனம் எழும்பிற்று. இத்தாலியில் தடை-ஜெர்மனியில் காட்டாதே என உத்தரவு — இப்படியாயிற்று, அந்தப் படம். 'சார்லி தொலைந்தான்' என்று சந்தோஷப்பட்டோரும் உண்டு.

ஆனால், 1939ல் அவனுடையஅடுத்த படம் தயாராயிற்று. படத் தயாரிப்புலகிலேயே, சார்லிக்கு, பலத்ததொரு வெற்றியைக் குவித்த படம், அது தான். ஜெர்மனியின் எதேச்சாதிகாரனாகி, உலகத்தையே ஆரியமயமாக்கப் போவதாக அலறி, போர் முழக்கம் செய்த ஹிட்லர், அவனுடைய கதாநாயகன் ஆனான். இதே 'ஹிட்லரை' வைத்து, போருக்குப் பிறகு, ரஷ்ய நாட்டினர்கூட, 'பெர்லின் வீழ்ச்சி' என்றோர் படத்தைத் தயாரித்திருந்தனர். அந்தப் படத்தில், ஸ்டாலினைப்பற்றிய புகழ்க் காட்சிகள் அதிகமாகவும், ஹிட்லரை ஒரு அசடு போலவும் சித்தரித்துக் காட்டியிருந்தனர். ஆனால், சார்லி 'ஹிட்லர்' வேஷமூலம ஹிட்லரை அல்ல காட்டியது — அவன் கொண்டிருக்கும் கொள்கைகளின் கேடுகளை விளக்க முயன்றான். அதனால், அந்த வேடத்தின்மூலம், நகைச்சுவை; அருகிலேயே விஷய விளக்கம். கேலி-பக்கத்திலேயே அந்தக் கேலிக்குரிய பொருள்—ஆகியவைகளைச் சித்தரித்தான். அந்தப் படத்தின் பெயர் 'Dictator' (சர்வாதிகாரி) என்பதாகும். அந்தப் படத்தில், உலகத்தைக் குறிக்கும் 'குளோப்' ஒன்றைக் காண்பித்து, அது முழுவதையுமே தன்னுடைய கரங்களால் அணைத்துக்கொள்ளப்போவதாக ஹிட்லர் அலறுவதாக ஒரு காட்சி! அதனை, அப்படம் பார்த்த எவரும் மறக்கமுடியாது. வழக்கம் போல இந்தப் படத்துக்கும் எதிர்ப்பு இருந்தது. அர்ஜென்டைனாபோன்ற நாடுகள் தடையும் செய்தன, ஹிட்லரின் ஆபத்தை, அமெரிக்கா அப்போது உணரவேண்டிய அளவு உணரவில்லை. அதனால், சார்லியின் படத்துக்கு, எப்போதும்போலவே, 'மகத்தான எதிர்ப்பு' வழங்கப்பட்டது. அந்தப் படத்தின் முடிவில், சார்லி வழங்கிய ஆறு நிமிடப் பேச்சு, உலகத்தையே குலுக்கிற்று - பிடிக்காதவைகளைத் தொலைக்கும் ஆயுதம், கிண்டல்-காண் போரின் சலிப்பை விரட்டுவது நகைச்சுவை—படம் முழுவதையும் இதைத் தந்தேன். எனினும், கடைசியில், என் கருத்தை வெளிப்படுத்த விரும்பியே, அந்த வசனங்களைப் பேசினேன்—என்றான், சார்லி. அந்த வசனங்கள்,

> ''புதியயுகம் அமைக்கப் போராடுவோம். ஒருவனை ஒருவன் வதைக்கும் கொடுமை ஒழிய—வேலையில்லாதோர் என்ற பெயருடன் வீதியில் உலவும் ஏழை மக்களின் துயரங்கள் ஒழிய—வருங்கால வாலிபர் உலகுக்கு சங்கடமற்ற இன்பப் பாதையை அமைத்துக் கொடுக்க - பழைமையின் பிடியிலே கிடக்கும் இந்த உலகை விடுவிக்கப் போராடுவோம், நாம். விரோதம்-குரோதம் - வீண் சண்டை - நிறக் கொடுமை என்கிற சமூகக் கேடுகளைச் சாய்த்து உலக முழுமைக்கும் இன்பம் ஏற்பட, ஏ! வாலிபர் உலகமே-வா, வா, போராட! விஞ்ஞானமும், அறிவும், ஒரு சிலரின் கையிலே சிக்கி-நம்மை நாசத்துக்கு இட்டுச் செல்லுகின்றன. இது மாற்றப்பட்டு, அவை சமூகத்தின் சொத்துக்களாக்கப் படவேண்டும். இதுவே, உண்மை ஜனநாயகம். இந்த நீதியைப் பெற-வீரர்காள்! — ஒன்று சேருவோம்; போராடுவோம்!''

அரிய நீதி! தெளிய உரை!! இந்தப் படத்தின் புகழ் பரவத் தொடங்கியதும், அமெரிக்காவிலே உள்ள எல்லோரும் போய்ப் பார்க்கலாயினர், சார்லியின் நடிப்பையும் தயாரிப்பையும், எல்லோரும் பாராட்டலாயினர்—''மிகவும் திறமையுள்ளவன்தான். சந்தேகமில்லை! ஆனால், அவ்வளவு திறமையும் இப்படி வீணாகிறதே என்கிற விசாரம்தான் எனக்கு'' என்று பெருமூச்சால் பேசினர், பிரபுக்கள். எந்தப் பத்திரிகைகள் அவனுடையபடத்துக்கு ஆரம்பத்தில் ஏசலையும் ஏளனத்தையும் அள்ளிவழங்கினவோ, அதே பத்திரிகாசிரியர்கள் அவனைப் பாராட்ட ஆரம்பித்தனர்! 1940-ல், அந்த ஆசிரியர்கள் எல்லாம் ஒன்று கூடி, ''இந்த ஆண்டிலேயே மிக உன்னதமான நடிப்புக் கலைஞர், சார்லி'' என்கிற பட்டத்தையும் பரிசையும் வழங்க அவனை அழைத்தனர்! அவனோ, புன்சிரிப்போடு, 'மிகவும் மகிழ்ச்சி' என்று மறுத்துவிட்டான்!! அடுத்த ஆண்டு, ''அமெரிக்காவின் சிறந்த நடிகன்'' என்கிற பரிசை (Academy Award) அரசினர் வழங்கப்போகிறார்கள் என்று, அவனிடம், நண்பர்கள் பலர் சொல்லினர். அந்த நண்பர்களிடம் அப்படி அழைப்பு வந்தால், தான் அனுப்ப இருப்பதாகத் தெரிவித்த பதில் படத்தயாரிப்புலகில் இருப்போருக்கு, ஒரு அரியபாடமாகும்,

''எனக்குப் பரிசு வழங்க முன் வருகிறீர்கள்? எதற்கு! 'சர்வாதிகாரி' படம் வெற்றி பெற்றதற்கு ஒரு படத்தின் வெற்றி, எப்போதும், ஒரு மனிதனின் கையில் இல்லை. அதன் வெற்றிக்கு நான் மட்டுமல்ல—அதன் தயாரிப்பில் உழைத்த ஒவ்வொருவருக்கும் பங்குண்டு''

இந்தப் படம் அமெரிக்காவில் ஓடிக்கொண்டிருந்த நேரத்தில்தான், ஹிட்லர், ரஷ்யாமீது படையெடுத்தான். 'ரஷ்யாவை, ஹிட்லர் அழிக்கட்டும்!' என்கிற எண்ணம் அமெரிக்கப் பிரபுக்களிலே பலருக்கு, இருந்த நேரம் அது. அப்போது, இதன் ஆபத்தை விளக்கி 'நியுயார்க்'கில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற்கு சார்லி, தந்திகொடுந்தான். அதைக் கண்ட பலர், எரிச்சல்கொண்டனர்! பிறகே, அது எவ்வளவு சரியான யோசனை என்று கண்டனர்!! அத்தந்தியில் சார்லி, கூறியயோசனை.

''ரஷ்யாவிலே, போர். ஜனநாயகம் வாழப்போகிறதா அல்லது சாகப்போகிறதா என்பதை அந்தப் போரே முடிவுகட்டப் போகிறது. ஆகவே, அமெரிக்க சர்க்காருக்கு நான் யோசனை சொல்லுகிறேன். பிரிட்டனும், நீங்களும் சேர்ந்து ஜெர்மனியை மேற்கிலிருந்து தாக்குங்கள்! ரஷ்யா, கிழக்கேபார்த்துக்கொள்ளும்!! இப்படிச் செய்தால், வரப்போகும் வசந்தகாலம், நமக்கு வெற்றிக் காலமாக இருக்கும்''

இந்தத் தந்தியைக் கண்டோர், சார்லியின் திறமை சினிமா உலகிலேயே இல்லாமல்—இப்படியெல்லாம் வீண்யோசனைகளை ஏன் கூறத் துணிகிறது? பெரிய வீரனோ! ராஜதந்திரி என்ற எண்ணமோ!!—என்றெல்லாம், கேலி செய்தனர். ஆனால், சார்லியோ, தன்னுடைய யோசனையை அடிக்கடி வலியுறுத்தினான். ரஷ்யப் போர் நிவாரணத்துக்கென நிறுவப்பட்ட கமிட்டியின் விருந்தொன்றில் கலந்துகொண்டு அமெரிக்க மக்களுக்குத் திட்டமான எச்சரிக்கை விடுத்தான், ''நான் நடிகன்! கலைஞன்!! என்னுடைய கண்கள், பிறருடைய நடையுடை பாவனைகளை எவ்வண்ணம் யூகித்துக் கிரகிக்கிறதோ அதைப் போல உலகின் போக்கையும் யூகித்துணரும் சக்தியைய்யும் பெற்றிருக்கும் என்பதை நீங்கள், எண்ணிப்பார்க்க வேண்டும். நான், உலக நன்மைக்கே கூறுகிறேன். ஹிட்லர் வெற்றி முரசு கொட்டிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அமெரிக்காவிலிருக்கிற நாம், 'ரஷ்யா தோற்கிறது' என்று ஆனந்தப்பள்ளுப் பாடுவதும், ரஷ்யாவுக் கெதிரான பிரச்சாரங்களைச் செய்வதும் ஆபத்து. போரில், நேச நாடுகள் ஈடுபட்டிருக்கும்போது, அவைகளுக்குதவி வெற்றியைப்பெற முனைய வேண்டும்'' என்று திடமாக எடுத்துச் சொன்னான். அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டும், இதே கொள்கையை, அப்போது எடுத்து விளக்கிக்கொண்டிருந்தார்! இதனால், ஒருபோது சாப்ளினைத் தூற்றிய அரச மண்டபத்தில், அவனுடைய பெயரும் பேச்சும் அடிக்கடி நுழையலாயிற்று.

போருக்கு, சார்லி செய்யும் உதவியின் அளவையும் தரத்தையும் ரஷ்யா நன்குக உணர்ந்தது. அதனால், ரஷ்ய சர்க்கார், சார்லியின் படங்களுக்காக ஒரு விழாவை நடத்தி' ரஷ்ய மக்கள் யாவரும் கண்டு களிக்கும் சந்தர்ப்பத்தை உண்டாக்கிற்று. இந்தப் பாராட்டு, அமெரிக்கப் பிரபுக்களிடையில், ஐயத்தை அதிகமாக்கிற்று. அவனுக்கும் ரஷ்யாவுக்குமிடையே இரகசியத் தொடர்பிருப்பதாகவும் சந்தேகப்படலாயினர். ''எனக்கென்ன? நான் உலகத்தின் பிரஜை; உலக நன்மைக்காகப் பாடுபடுகிறேன்'' என்று அவன் அடிக்கடி கூறிய பதில், அவர்கள் ஆத்திரத்தை, இன்னும் அதிகமாக்கிற்று.

இந்த நிலையில், சார்லியின் ''மா[illegible]ஷியர் வெர்து'' எனும் படம் வெளியாயிற்று. இந்தப் படத்தின் முதல் காட்சியே, மயிர்க்கூச்செரியச் செய்யும். ஒரு அழகான சோலையின் இளம் துளிர்களையும் மலர்களையும் கத்தரிக்கோலால் வெட்டியெறியும் காட்சியுடன், சார்லி தோன்றினான். படத்திலும், அதே விஷயம் கிடந்தது. இப்போதுள்ள முதலாளித்துவ அடிப்படையில் பணம் படுத்துகிற பாடும், அந்தப் பணத்தைப் பெற இல்லாதவன் மனதில் ஏற்படுகிற தீய எண்ணங்களும் மிக உன்னதமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. காலிழந்த மனைவி மீதும் குடும்பத்தின்மீதும் மாருத பாசங்கொண்ட ஒரு மனிதன், நாகரீக நகரில் செய்யும் கொடுமைகளையும், அந்தக் கொடுமைகளைச் செய்யுமளவுக்கு அவன் துணிந்த தன் கோரத்தையும், படம் எடுத்துக் காட்டிற்று. எப்படிப் பொறுப்போர், அமெரிக்கச் சீமான்கள். ''தீய எண்ணங்களைச் சிருஷ்டிக்கிறான். ஏழைகள் மனதைத் தூண்டுகிறான்'' என்று ஏசலாயினர். பகிரங்கமாகவே குற்றம் சுமத்தினர். இவைகளைக் கண்ட சார்லியரல் தாங்கமுடியவில்லை — ''இந்த ஹாலிவுட்டைவிட்டே ஓடிவிடலாமென இருக்கிறேன். இங்கு நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பலவாயினும், சார்லி சாப்ளினாகிய நான் கூறுகிறேன்—ஹாலிவுட் செத்துக்கொண்டிருக்கிறது — மரணப் படுக்கையிலிருக்கிறது'' என்று எழுதினான்.

''ஒரு தொழிற்சாலையில் 'டிராக்டர்களை'த் தயாரிப்பதுபோல பிரசித்திபெற்ற படங்களை உற்பத்தி செய்து குவித்துவிடலாமெனக் கனவு காணுகிறது. புதிய பாதை புகுந்தாலொழிய இதை நிறைவேற்றமுடியாது. அந்தப் பாதையில் நடைபோடவேண்டுமானால் 'பணமே பரமாத்மா' என்கிற நிலை மாறவேண்டும். பணத்தாலேயே யாவும் முடியும் என்கிற மனோபாவம் மாறவேண்டும்''

என்று திடமாகத் தெரிவித்தான்—நிருபர்களிடம்.

இதைக் கேட்டோர், ''நீ ஒரு கம்யூனிஸ்டு; அதனால்தான் பணத்தின் மதிப்பை இகழ்கிறாய்'' என்று கூறலாயினர்.

''இல்லை; நரன் ஒரு கம்யூனிஸ்டு அல்ல''

''அப்படியானால், கம்யூனிஸ்டு அனுதாபி''

''அதுவும் அல்ல''

''அப்படியானால், அமெரிக்காவக்கு வந்து 35 வருடங்களாகியும் நீ ஏன் இந்த நாட்டுப் பிரஜையாகவில்லை?''

''உலகமே என்னுடைய தேசம் தான்''

''இப்படித்தான் ஏமாற்றி வருகிறாய் நீ!''

''இதயபூர்வமாகச் சொல்லுகிறேன் —அரசியலில் நம்பிக்கை இல்லாதவன் நான்......''

''இதுவரை, எந்தத் தேர்தலிலா

## செய்வாரா ?

*பெரிய பணக்காரர் என்று சொல்லுகிறார்கள் — பரோபகாரி என்றுகூட கூறப்படுகிறது, சென்னை கவர்னர் பிரகாசாவைப் பற்றி. அதையெல்லாம்விட முதிர்ந்த தேசியத் தலைவராம் அவர்! அவருடைய பார்வைக்கு, ஒரு செய்தியை வைக்கிறோம்.*

*கல்கத்தா*
*நவ. 23*

*'யுவர்களுக்குஞானுவப்பயிற்சி அளிக்க கல்கத்தா பல்கலைக் கழகம் ஏற்படுத்திய நிதிக்கு மேல் வங்க கவர்னர் டாக்டர் எச். ஸி. முகர்ஜி, சென்ற ஆண்டு சம்பளம் ரூ. 60,000 நன்கொடையாக அளித்துள்ளார்.'*

*இதேபோல, பிரகாசாவும், இங்குள்ள ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்கு — தான் பெறும் சம்பளத்தில் ஒரு பகுதியை வழங்குவாரா? எதிர்பார்க்கலாமா?*

வது, யாருக்காவது ஒட்டுப் போட்டதுண்டா?''

''கிடையாது. காரணம், எந்த அரசியல் கட்சியையும் ஆதரிக்க விரும்பவில்லை. அதனால்தான் குடி உரிமையும் பெற விரும்பவில்லை......''

''இது தான் என்னுடைய நாடு என்று கூறிக்கொள்ளும் ஆசையே கிடையாதா—உனக்கு?''

''இதுவரையில் இல்லை — அப்படி ஏற்பட்டால், உலகத்தின் கண்ணுக்கே தெரியாததும், மிக மிகச் சிறியதுமான அண்டோராவையே தேர்ந்தெடுப்பேன்'' [அண்டோரா என்பது பிரெஞ்சு எல்லையில் இருக்கும் சிறு இடமாகும். மக்கள் தொகை, நூற்றுக் கணக்கில்தான், அங்கு!]

''உன்னுடைய இலட்சியம்தான் என்ன?''

''என்னுடைய இலட்சியமா?— அதோ, பரதவிக்கிருனே மனிதன்—அவன் தலைக்குமேல் ஒரு கூரையும், அவன் குடும்பம் வாழ ஒரு இடமும், அவனுடைய கை கால்கள் உழைத்துப் பிழைக்க ஒரு வேலையும் கிடைக்கவேண்டும் என்பதுதான்.''

*

சந்தேகங்களும் எரிச்சலும் அதிகமாகிக்கொண்டிருந்த இந்த நேரத்தில்தான், வியன்ஞவிலிருந்து வந்து அமெரிக்காவில் வாழ்ந்த ஹேன்ஸ்எஸ்லர் எனும் கவிஞன்மீது, 'கம்யூனிஸ்டு' எனும் பழியைச் சுமத்தி, அவனை நாட்டைவிட்டு ஒட்டுவதென்று அமெரிக்க அரசு முடிவுசெய்தது.

இதுபோல் பலர்மீதும் பழி சுமத்திற்று! இந்த அக்கிரமத்தைக் கண்ட சார்லி, பாப்லோ பிகாசோ என்கிற பிரெஞ்சு நடிகனுக்குத் தந்திகொடுத்து இதை எதிர்த்து பாரியிலுள்ள நடிகர்கள் எல்லாம் கிளர்ச்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். அமெரிக்க பூபதிகள், அலறினர்! பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர்!! ''சார்லியையும் நாட்டைவிட்டுத் துரத்தவேண்டுமென'' அமெரிக்கக் காங்கிரசில், வலியுறுத்தினர். சார்லியை விரட்டினாலொழிய வேதனை தீராது!—என்று, பெரிய அளவிலே' அந்த இலட்சிய நடிகனுக் கெதிராகக் கிளர்ச்சி நடத்தப்பட்டது.

இதனை எப்படிச் செய்வது?—சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த அவர்களுக்கு 1952-அக்டோபரில் நல்லதோர் வாய்ப்பு கிடைத்தது! சார்லி, தன்னுடைய குடும்பத்தாரோடு ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தான் அப்போது. அவனை மீண்டும் அமெரிக்காவில் நுழைய அனுமதிக்கலாமா? கூடாதா? — என்பதைப்பற்றி அமெரிக்காவில் பலத்த விவாதம் ஏற்பட்டு, அந்த ஒப்பற்ற கலைஞனை ''அனுமதிப்பது ஆபத்து'' என்று முடிவு செய்தனர். பாரிசிலிருக்கும்போது இந்த முடிவு அவனுக்குக் கிடைத்தது! நூறு நிருபர்களை அழைத்து, ''நான் இப்போது அங்கே திரும்பும், உத்தேசமில்லை. ஆனால், என்ருவது ஒரு நாள் எனக்கு ஆசை வந்தால், அதைத் தடுக்க எந்த உத்திரவாலும் முடியாது'' என்று கூறினான், அதுமுதல், 'ஹாலிவுட்' அவனை இழந்தது! இப்போது, ஸ்விட்சர்லார்ந்திலும், பிரிட்டனிலுமாக, அடிக்கடி, காலம் கழித்து கொண்டிருக்கிருன்!!

''மனதுக்குச் சரியென்று, என் மனது கட்டளையிடுகிறதைச் செய்கிறேன். நான் எதைச் செய்தாலும், பூரண நம்பிக்கையொடு செய்கிறேன். மனித குலத்துக்குச் சேவைசெய்ய வேண்டுமென்ற இலட்சியத்தோடு செய்கிறேன். நான் புயலுமல்ல! தென்றலுமல்ல!! — மனிதன்'' என்ற வீர விளக்கம் தந்து, உலக ஒளியாக விளங்கும், அந்த உன்னத கலைஞனை, சீன நாட்டுப் பிரதமர் சூ-என்-லாய், ஜினிவா மாநாட்டின் போது வரவேற்று உபசரித்தார். அத்தகைய வீரன், விரைவில் இந்திய உபகண்டத்துக்கு வரப்போவதாகச் செய்திகள், கூறுகின்றன.

*

சார்லி சாப்ளின்போல, இலட்சியங்களுக்காக வாழ்க்கையைத் தத்தம் செய்யும் எண்ணற்ற புரட்சி நடிகர்கள், இன்று நாட்டில் நடமாட ஆரம்பித்திருப்பதால்தான், இங்குள்ள பத்தாம் பசலிகள் அலற ஆரம்பிக்கின்றன — அருவையின் காரணமாக எழுதுகோல் பிடிக்கும் 'பணசக்தி'யாளரும் உண்டு. ஏடுகள்மூலம் ஏளனமும் கேவலமானவர்கள் என்ற இழிசொல்லும், 'நடிகன்தானே' என்ற ஏச்சும், அவர்கள் நடிப்பதென்ன நாடகமா? என்கிற பழியும், இந்த நாட்டில் தங்களை 'முதலாளிகள்' என்று நினைத்துக்கொண்டிருக்கும் உயர்சாதிக்காரர்களிடமிருந்தும், பணதிபதிகளிடமிருந்தும் கிடைப்பது அறிந்தும்—அறிவுப் பாதையில் நடைபோடும் எண்ணற்ற 'இலட்சிய நடிகர்கள்' இங்கே உருவாகி இருக்கிருர்கள். சாப்ளினைப் போல, தமது எண்ணங்களை மக்களுக்குக் கூறும்வாய்ப்பு, 'பணமே பிரதானமாக' இருக்கும் இங்கே அவர்களுக்கு இல்லையென்ருலும், இயன்றவரையில் மக்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபடவேண்டும், மக்கள் மனதை மறைத்துக் கிடக்கும் பாசிகளை அகற்ற நாமும் பணியாற்றவேண்டும் என்கிற ஆசை — பலரை, அறிவியக்கத்தின் பக்கம் சேர்த்திருக்கிறது. இந்தக் காட்சியைக் காணும் இங்குள்ள ஆரிக்க இனம் அவர்களை மறைக்க, இல்லாத கேடுகளையெல்லாம் செய்துவருகிறது— அதன் ஒரு காட்சிதான், அண்மையில் சென்னையில் நடைபெற்ற நாடகவிழா கேலிக்கூத்து!!

இவ்வண்ணம், முன்னேற்றப் பாதையில் — எந்தக்கட்சி அனுதாபம் இருந்தாலும் சரி—நடைபோடப் பழகும் இலட்சிய நடிகர்களுக்குத் திரைபோட்டு மூடும் திருப்பணி, இந்த நாட்டில், பல்லாண்டு காலமாக இருந்துவருகிறது. இதனைக் கண்டு அஞ்சி, சரணுகதி அடைந்து, கிடைக்கும் பணம், போதும்என்றுபோனேரும் உண்டு. கிடைத்தபணமும் போனலும் 'ஏதோ இந்த மக்கள் சமுதாயத்துக்கு நாமும் பாடுபட்டோம் என்கிற திருப்தி போதும்' என்று எண்ணிப் பாடுபடுவோரும் உண்டு!

இத்தகைய இலட்சிய நடிகர்கள் தொகை, சில ஆண்டுகளாக, இங்கே வளர்ந்து வருவதைக் காணுகிறது-நாடு. அவர்களைப் போற்றியும் புகழ்கிறது. அந்த இலட்சிய நடிகர்களுக்கு 'சார்லி சாப்ளின்' வாழ்க்கை, ஒரு ஓவியமாகும்-அயர்ச்சி வரும் நேரத்தில் புத்துணர்ச்சி பெற. அதிகாரம் தாக்கினலும், பணதிபத்யம் மிரட்டினலும், ஏட்டாளர் ஏசினலும், அவைகளையெல்லாம் தாண்டி 'சாகாதவர்களாக' ஆக்கும் 'சக்தி' இருக்கின்ற இடம்—இரும்புப் பெட்டிக்காரர்களிடம் அல்ல; ஏழையிடம் இருக்கிறது. அந்த ஏழைகளின் இதயங்களில், யார் ஏறுகிருர்களோ, அவர்கள்தான் இலட்சிய நடிகர்கள்; என்றும் இருப்பவர்கள். அவர்கள் வளர்க! வாழ்க!! ★


## கர்னடக தி. மு. க.
## முதல் மாநாடுகள்

டிசம்பர் 18, 19 தேதிகளில்
பெங்களூரில் நடைபெறும்

★

### சமுதாய சீர்திருத்த மாநாடு

தலைவர்
காஞ்சி-கல்யாணசுந்தரம்

திறப்பாளர்:
ப. உ, சண்முகம்

★

### அரசியல் மாநாடு

தலைவர்:
என். வி. நடராசன்

திறப்பாளர்:
தோழியர் அருண்மொழி

பொதுச்செயலாளர் அண்ணதுரை
உட்பட கழக முன்னணி வீரர்கள்
அனைவரும் கலந்துகொள்வார்கள்.

# "மரண சாசனம்"

[பூ. கணேசன் M. A.]

★

"மதிப்பிற்குரிய பொதுமக்களே என்னை மன்னிப்பீர்களா? கடந்த பலவாண்டுகளாக நான் உங்களை மனமார ஏமாற்றி வந்திருக்கிறேன். கண்ணிருந்தும் குருடனாய், கருத்திருந்தும் அறிவிலியாய் நான் இருட்டறைக்கு வழிகாட்டி வந்தேன். உங்களுக்கு நான்பேசுபவை, எழுதுபவை, ஏடுத்து விளக்குபவையெல்லாம் பொய்யும், புளுகும், அநாகரிகமும், அவதூறும் நிறைந்தவையென்று எனக்கு அப்பொழுதே தெரியும். எனினும் என் செய்வது? உயிரக்க நினைத்திருப்பேனானால் எனது உள்ளக்கருத்தை, உண்மையை உலகினருக்கு எடுத்துக் கூற விட்டிருக்காது குருக்கள்மார் உலகம். தன்னலத்தரகர்கள் என்னை அஞ்ஞான்றே சாய்த்திருப்பர். உங்களிடமிருந்து பாவ மன்னிப்புப் பெற்றுக் கொள்ளக்கூட எனக்கு காலவசதியிருந்திருக்காது. பெருமனது கொண்டு என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு மன்னிப்பு அளித்தமைக்கு அறிகுறியாக இதோ யான் வைத்துச் செல்லும் எனது "மரண சாசனத்தை"ப் படித்துப் பயன் பெற்று சீர்திருத்த வித்துக்களை ஊரிலே, நாட்டிலே, உலகிலே பரப்ப முற்படுங்கள், விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்!".

*

கிடைத்ததற்கரிய இளமைப் பருவத்தை வறிதே மதக் கல்வி பயிலுவதில்செலவிட்டு, படித்துப்பட்டம் பெற்று பாதிரியாகவும் பதவியேற்று, மயக்க மத மருந்தை மக்களிடையே மட்டின்றிப்புகுத்தி இறுதியில் உள்ளந் திறக்கப்பெற்ற இத்தாலியப் பாதிரியார் ஜீன் மெஸ்லியர், மேற்கண்டவாறு பேசியிருக்கிறார், தனது மரண சாசனத்தின் முகவுரையிலே. மதக் குருக்கள்மார் மரபைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பைப்போல தோற்றமளிக்கிறாரல்லவா? அவர் என்னசெய்வார்? சமயநூல்களை சஞ்சலமின்றிப்படித்தார். தனக்கெனச் சிறிது அறிவு இருப்பதையும் உணர்ந்தார். அறிவு அமைந்ததே ஆராய்ச்சி செய்வதற்காகவென்பதைத் தெரிந்தார். ஆராய்ச்சியுலகில் சிறிது தலைநீட்டினார். அவ்வளவே, தவிடுபொடியாயின, மத, சாஸ்திர, புராணப் போதனைகள். தோழர் மெஸ்லியர் தன்னுடைய ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தனது வாழ்நாளிலேயேஎடுத்துக் கூறத் துணிந்திருப்பாராயின் அவர் கண்ட முடிவின் முழுப்பயனையும் நாம இன்று அடைந்திருக்க முடியாது. அவரது 'மரணசாசனம்' புத்தகவடிவில் நமக்குக் கிடைப்பதற்கு மார்க்கமில்லை!

மதக்கல்வியை மட்டின்றிப் படித்திருந்த நமது மெஸ்லியருக்கு வஞ்சகமனப்பான்மை வந்துஒன்றுவது இயல்பே. அவ்வஞ்சகத்தை ஆயுதமாக வைத்துக் கொண்டுதான் அவர் வாழ்நாள் முழுமையும் மக்களுக்கு மதபோதனையும் புரிந்து கொண்டு, இடையிடையே தனது அறிவுக் கொள்கைகள் மிளிரும் மரண சாசனத்தையும் தயாரித்து வந்தார்.

பகுத்தறிவுப் பாதிரியாரின் இறுதிக் காலங் கிட்டுவதற்கும் அவரது மரண சாசனம் முடிவதற்கும் சரியாகவேஇருந்தது. மரணப் படுக்கையிலும் பாதிரியார் தனது உண்மையுள்ளத்தை வெளிப்படுத்தினாரில்லை. அமைதியான முறையிலேயே ஆவி துறக்க வேண்டுமென எண்ணினார் போலும்.

ஜீன்மெஸ்லியர் உயிர் நீத்தார் அவரது படுக்கையின் தலையணையடியிலே காணப்பட்டதொரு தஸ்தாவேஜு ஆம், அதுதான் அவரது மரண சாசனம். அச்சாசனத்தின் முகவுரையே இக்கட்டுரையின் முதற்பாரா. மத நோய் பிடித்து மக்களை என்றென்றும் மடைமையிலாழ்த்த கங்கணம்கட்டி முன்வரும் சமூக விரோதிகள் ஒரு தடவை இச்சாசனத்தைப் புரட்டிப் பார்ப்பார்களா? எவ்விதத்திலும் இவர்களுக்குத் தாழாத, கல்வி மேம்பாட்டில் ஒருபடி உயர்வாகவே திகழ்ந்த பாதிரித் தோழரொருவர் தான் கண்டறிந்துணர்ந்த உண்மைக் கருத்துரைகளைப் பிழம்பாகத் தந்து சென்றிருக்கிறாரே! சமய சாஸ்திரப் பாதுகாப்பாளர்களின் திருக்கண்ணோக்கை ஒரு முறை பெறக்கூடாதா இச்சாசனம்? வகையறியா மாக்களாகிய இவர்கள் கடவுளைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கும் அறிவுப் பாதையில் இறுதிக் காலத்திலாவது செல்ல விரும்பிய தோழர் மெஸ்லியர் கொண்டிருந்த கருத்துக்குமிடையேயுள்ள ஒற்றுமை — வேற்றுமைகளை அறிய வேண்டாமா? மனிதத் தன்மையோடு, மானத்தோடு, பகுத்தறிவுக்கு முதலிடந் தந்து மக்கள் சமுதாயம் சிறப்புடன் வாழ வழி வகைகளை அமைப்பதே சமயநெறியென்பதை யுணராது, மன்பதையின் பெரும் பகுதியினரை எக்காலத்தும் முதுகெலும்பற்ற புழுக்களாகவே ஆக்கி வைத்து அவர்களது அறியாமையின்பேரில், மூடப் பழக்க வழக்கங்களின் பேரில் வாழ்நாளளவும் வயிறு வளர்ப்பதற்கென்றே ஒரு கூட்டத்தைத் தயாரித்து வருவதுதான் மதம் என்று கருதும் இக்கால நச்சுக் கொள்கையினருக்கும், மதம் மக்களை மானத்துடன் வாழச்செய்யவில்லை என்பதை எப்படியும் எடுத்து விளக்கிய மெஸ்லியருக்கும் இடையேயுள்ள தராதரத்தை யறிந்து கொள்ளவேண்டாமா? மோட்சம், நரகம், பாவம், புண்ணியம் ஆகிய பித்தலாட்டங்களை மாஜிப்பாதிரியாரொருவர் எத்தகு முறையில் உடைத்தெறிகிறாரென்பதையுணர உணர்வாலுந்தப்பட்ட உள்ளம் உற்சாகத்துடன்எழவேண்டாமா?

இதோ அவரது பகுத்தறிவுக் கடலாகிய மரணசாசனத்திலிருந்து ஒரு துளி.

"கடவுளை நம்பு" இதுவே உலக மதங்கள் ஒவ்வொன்றினுடையவும் கட்டளைப் புத்தகத்தின் முதல் ஏட்டில் காணப்படும் முதல்வரி. அடுத்தடுத்து ஏடுகளைத் தள்ளுங்கள். என்ன காண்கின்றீர்கள்? ஒவ்வொரு மதமும் கடவுள், உலகம், ஆன்மா ஆகியவற்றின் அளப்பரிய தன்மைகள் பற்றியும், அவை மூன்றும் எப்படி ஒன்றோடொன்றிணைந்துபிரிக்க முடியாமல் நிற்கின்றனவென்பதை யுந்தானே விளக்கிச் செல்கிறது? இந்த நிலையில், கடவுளை ஏன் நம்ப வேண்டுமெனக் கேள்வியொன்று எழுமாயின் இத்தனை மதங்களும் எத்தனை ஆழபடுகுழியில்சென்று மறைந்துபடுமென்பதை எண்ணிப் பாருங்கள்!".

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்,




## 29. குற்றவாளி யார்?

உயர்நீதி மன்றத்திலே வழக்கு ஆரம்பித்தது.

"சர்க்கார் தங்கள் சாட்சிகளை விசாரிக்கலாம்" என்றார், நீதிபதி.

"எஸ் யுவர் லார்ட்ஷிப்" என்று ஆங்கிலத்திலே கூறியவண்ணம் எழுந்தார், சர்க்கார்வக்கில் வாளாடி கிருஷ்ணசாமி அய்யர்.

சாட்சிகள் விசாரணை நீண்ட நேரம் நடந்தது.

முதலில், மைலாப்பூர் வக்கிலாத்துப் பெண்மணி ஒருத்தி சாட்சிக் கூண்டேறினாள். ஆறு மாதத்திற்குமுன், தன் வீட்டில் பட்டப்பகலில் நுழைந்து குழந்தையின் கழுத்திலிருந்த தங்கச் செயினை அறுத்து எடுத்துக்கொண்டு ஓடியது ஆறுமுகம்தான் என்று நிச்சயமாக அவள் கூறினாள்.

பின், யாரோ ஒரு நடுத்தர மார்வாரி மாது, பாரிஸ் சதுக்கத்தில் தன் கழுத்திலிருந்த காசு மாலையை அறுத்துக்கொண்டு ஓடியது ஆறுமுகம்தான் என்று விளக்கினாள்.

மண்டிக்கடை சங்கரலிங்கம் பிள்ளை, பல நேரங்களில் தன் கடை முன் குடித்துவிட்டு ஆடியது ஆறுமுகம்தான் என்று சுட்டிக் காண்பித்தார்.

இப்படி ஆறுமுகத்தின் பூர்வ வாழ்க்கையின் பல அம்சங்களுக்கு விளக்கம் தரும் வகையில் சாட்சிகளை அழைத்தபின், உத்தமநாதரின் 'பாக்யபவனத்தில்' வேலை செய்யும் குப்பன், சாமிநாதன் மற்றும் எல்லோரும் விசாரிக்கப்பட்டனர்.

'தினமித்திரன்' 'காலைச் செய்தி' 'ஈவினிங்நியூஸ்' முதலிய பத்திரிகை நிருபர்கள் நீண்டநேரம் விசாரிக்கப்பட்டனர். ஒரு பூட்லின் உதவியால் திடீரென்று புதையுண்டிருந்த உத்தமநாதரின் உடலைக் கண்டு பிடித்த விபரத்தையும், ஆறுமுகத்தின் மறைவையும் அவர்கள் விளக்கினார்.

பாஸ்கர், புஷ்பா, சாம்பசிவம் ஆகியோரின் அநுபவங்களும், ஆறுமுகத்தைத் துரத்திப் பிடித்த போலிஸ்க்காரர்கள் சாட்சியமும், இன்ஸ்பெக்டர் ஆதிமூலத்தின் விபரமான வாக்குமூலமும் தொடர்ந்து கூறப்பட்டது.

நான்கு டாக்டர்கள் சாட்சிக் கூண்டேறி, உத்தமநாதரின் மார்பிலும், தோளிலும் இருந்த மண்வெட்டிக் காயங்களைப்பற்றியும், பொன்னியின் கழுத்தை நெறித்து ஆறுமுகம் கொலை செய்த கோரத்தையும் விளக்கினர்.

ஆறுமுகம் உத்தமநாதரைக் கொலை செய்ய உபயோகப்படுத்திய மண்வெட்டி, காரில் கிடைத்த விஸ்கி பாட்டில், அவன் குடிசையில் கிடைத்த கம்யூனிச பிரசுரம், அவனிடமிருந்துபறிக்கப்பட்ட உத்தமநாதரின் மோதிரம், மணிபர்ஸ், ரூபாய்நோட்டுகள், எல்லாப்பொருள்களையும் எடுத்துக் காண்பித்து விளக்கம்கூறினார் கிருஷ்ணசாமி.

மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல் சாட்சிகளை விசாரித்துவிட்டு நான்காவது நாள் காலை தன் முடிவுரையை நிகழ்த்தினார்.

"இந்தச் சர்க்காருக்கு வக்கில் என்ற முறையில் மாத்திரமல்ல; இந்த நாட்டிலே சட்டத்திற்கு உட்பட்டு வாழ வேண்டுமென்று பிரியப்படும் நன் மக்கள் சார்பாகவும், நாகரீகம் படைத்த மனித சமுதாயத்தின் சார்பாகவும் கூறுகிறேன்! இங்கு இந்த மூன்று நாட்களாக விசாரிக்கப்பட்ட சாட்சிகள், இந்த ஆறுமுகம்எந்தளவுகோரச்செயலைப் புரிந்திருக்கிறான் என்பதை நன்கு விளக்கி இருக்கிறது. இந்தளவு காட்டுமிராண்டிச் செயலை புரிந்தவனுக்கு தூக்கு மேடையைத் தவிர வேறு வழியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கோர்ட்டார் அவர்கள், இந்த வழக்கின் முடிவை ஆர்வத்தோடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் பண்புடையவர்கள் திருப்தியடைந்து, நிம்மதியாக படுக்கையறை செல்லும் வகையில் தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்!" என்று கூறி முடித்தார்.

கோர்ட்டில் கூடியிருந்தவர்கள் அப்படியே உணர்ச்சிவசப்பட்டு நின்றனர். கிருஷ்ணசாமியின் ஆணித்திறமான வாதத்திற்குப் பிறகு, வழக்கில் விசாரிக்கப்பட வேண்டியது என்ன இருக்கிறது என்றே அவர்களுக்குப் புரியவில்லை.

"மிஸ்டர் நெடுமாறன்! நீங்கள் உங்கள் சாட்சிகளை விசாரிக்கலாம்!" என்றார் நீதிபதி.

ஒருவித ஆடம்பரமுமின்றி, மெதுவாக எழுந்து முன்வந்தார் நெடுமாறன்.

அவர் என்ன கூறப்போகிறார், எப்படி விவாதிக்கப்போகிறார் என்பதில் தங்கள் மனதில் ஒரு தனி ஆராய்ச்சியே நடத்திக்கொண்டு நின்றனர், அங்கு கூடியிருந்தவர்கள்.

நெடுமாறன் தன் வாதத்தை ஆரம்பித்தார்.

"நீதிபதியவர்களே! என்னுடைய வாழ்க்கையில் இதுவரை எனக்கு ஏற்பட்டிராத மனிதஉணர்ச்சியால் உந்தப்பட்டு இந்த இடத்தில் வந்து நிற்கிறேன், நான்! இந்த மூன்று நாட்களாக ஆறுமுகத்திற்கெதிராக நாற்பது சாட்சிகளை விசாரித்து, மிக விளக்கமான முறையில் அவனுடைய குற்றங்

களை உங்களுக்குப் படம் பிடித்துக் காண்பித்திருக்கிறார், சர்க்கார் வக்கீல். இதற்கு எதிராக சாட்சிகளை விசாரித்து நாளும்நாட்களைக் கடத்துவதில் அர்த்தமில்லை.

இன்றைய தினம் நான் இங்கே வந்து பேசுவது, பாவம், இந்த ஏழை ஆறுமுகத்திற்காக மாத்திரமில்லை; இந்த நாட்டிலே அகப்பட்டும், அகப்படாமலும் இருக்கும் ஆயிரக்கணக்கான ஆறுமுகங்களுக்காகத்தான்!

ஒரு வாலிபனின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே நான் என் கடமையை நன்கு உணர்கிறேன். வழக்கப்படி எதிர் சாட்சியங்கள் போடாமல் ஏதேதோ பேசுவதாக நீங்கள் நினைக்காதீர்கள். நான் கூறுவதை கொஞ்சம் பொறுமையோடு கேளுங்கள். இந்த வழக்கில் மாத்திரமில்லை; இந்த நாட்டின் நீதியைக் களங்கமற்றதாக்கப் பாடுபடுபவர்கள் அனைவரும் தங்கள் சிந்தனையில் ஒரு கணமாவது செலவிடப்பட வேண் வேண்டிய விஷயம் அது.

நீதிபதியவர்களே! இந்த வழக்கைப்பற்றி நாடு பூராவும் பிரபல்யப் படுத்தப்பட்டிருக்கிறது. ஆறுமுகத்தின்மேல் பொதுமக்களின் ஆத்திரம் பூராவும் திருப்பிவிடப்பட்டிருக்கிறது. இங்கு விசாரணை முடியும்முன்பே, பெரும்பாலானோர் தீர்ப்பு வழங்க ஆரம்பித்துவிட்டனர்.

இந்த வழக்கில் முடிவு காண வேண்டுமென்றே மற்ற வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு, இவ்வளவு விரைவில் இங்கு விசாரணை நடக்கிறது.

ஆறுமுகம் ஒரு ஆதித் திராவிடன்; ஏழை; பஞ்சை; பராரி. அவன் செய்த கோரச் செயல் மாத்திரமில்லை; அவன் உற்றார் உறவினரின் நிலைதான் அவன்மேல் அதிக குற்றத்தைச் சுமத்துகிறது. ஆகவேதான், இதைவிட மோசமான கொலை செய்தாலும், உயர் வகுப்பாருக்குக் கிடைக்கக்கூடிய எந்தச் சௌகரியமுமின்றி, இன்று அனாதையாக இந்தக் கோர்ட்டில் நிற்கிறான். அவனுக்காகப் பரிதாபப்படுவோர், தங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வாயைப் பொத்திக்கொண்டு செல்கின்றனர்.

ஆகவேதான், மறுபடியும் கூறுகிறேன்; நான் சாட்சிகளை விசாரிக்கப்போவதில்லை; நான் கூறுவதைப் பொறுமையோடு கேளுங்கள்; அதுவே போதும் என்று.

இந்த வழக்கிலே நாம் தெளிவாக்கிக்கொள்ளவேண்டியது, இரண்டு விஷயங்கள்தான்.

ஆறுமுகம் கொலையாளியா?

அவன் கொலையாளியானால், கொலை செய்யக் காரணம் என்ன?

ஆறுமுகம் கொலையாளி என்பதை அவனே ஒத்துக்கொள்கிறான்.

அதற்குக் காரணம்......?

அதைப்பற்றி இதுவரை யாரும் பேசவில்லை!

நீதிபதியவர்களே! இதுவரை காரணமின்றி கொலை செய்தவர்களைப் பார்த்திருக்கிறீர்களா?

இப்படிக் கூறுவதால், ஆறுமுகம் 'பைத்தியம்' என்று நான் கூறப்போவதாக ஒருகணமும் தாங்கள் எண்ணிவிடவேண்டாம். ஆறுமுகம் நல்ல மனோநிலை உடையவன்தான். **ஆனால், வளர்ந்த மனோநிலை உடையவனல்ல.**

ஆம்; அந்த ஒரே விஷயம்தான் நாம் நன்கு கவனிக்கவேண்டியது.

நீதிபதியவர்களே! இந்த வழக்கிலும், இதைப்போன்ற வேறு பல வழக்குகளிலும் நாம் கவனிக்க மறந்துவிடும் இந்த விஷயத்தை எப்படித் தங்களுக்கு எடுத்துவிளக்குவது என்பதில்தான் மூன்று தினங்களாக என் மூளையில் சிந்தனையலைகள் மோதிவருகின்றன. ஆறுமுகத்தின் முகத்தைப் பார்க்கப் பார்க்க என் எண்ணங்கள் உறுதியடைகின்றன. நான் நினைத்தவைகள் சரியென்றே படுகின்றன. ஆகவேதான் துணிவோடு 'குற்றவாளி' என்று ஒத்துக்கொண்ட பிறகும், வாதிட எழுந்துவந்திருக்கிறேன். இந்த வழக்கின் அடிப்படைகளை ஆராயும்போது நமது சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் பல வியாதிகள் என் கண்ணுக்குத் தெரிகின்றன. நம் நாட்டைப் பாதாளத்தில் தள்ளும் ஆபத்தான சக்திகள் வெளிவருகின்றன, இவைகளையெல்லாம் கூறவேண்டியது என் கடமை.

நீதிபதியவர்களே! இந்த வழக்கைச் சுற்றி எழுந்திருக்கும் சூழ்நிலைகள் என்ன என்பதை கொஞ்சம் கவனியுங்கள். ஆறுமுகம் கொலைசெய்தான் என்றவுடன், உத்தமநாதபுரம் மாத்திரமல்ல, நகரின் எல்லாச்சேரிகளிலும் உள்ள வாலிபர்களுக்கும் கசையடிகள் கிடைத்தன. சீர்திருத்த சங்கங்கள் சோதனை போடப்பட்டன. முன்னேற்றக் கழகங்களில் போலீஸ் கண்காணிப்பு போடப்பட்டது. நகரின் தாழ்த்தப்பட்டோர் ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தீவிர சீர்திருத்தவாதி, தொழிலாளர் தலைவர், தீண்டாமை ஒழிப்புத் தலைவர் திரு நல்லமுத்து கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்!

இவ்வளவு பரபரப்பும் ஏன்? ஆறுமுகம் என்ற தாழ்த்தப்பட்டோன், உத்தமநாதர் என்ற உயர்ந்தோரைக் கொலை செய்தான் என்ற காரணத்தாலேதானே? இதுவே, இதற்கு நேர் எதிராக நடந்திருந்தால், இப்படிப்பட்ட பரபரப்பு இருந்திருக்குமா? கொலை செய்யப்பட்டவன் ஆறுமுகமாக இருந்திருந்தால், இந்த அளவு சட்ட சம்பிரதாயங்கள் பேசப்படுமா?

அல்லது இந்த ஒரு ஆறுமுகம் கொலை செய்ததால்தான், இப்படிப்பட்ட போலீஸ் முஸ்தீப்புகளும், பத்திரிகா பிரச்சாரமும் நடத்தப்பட்டனவா? உங்களுக்கு நன்றாகத் தெரியும்; ஆறுமுகம் கொலை செய்வதற்கு முன்பே இந்த எண்ணங்கள் வளர்ந்து நிற்கின்றனவென்பது

## 'நாயகரும்', 'விநாயகரும்!

"பிள்ளைகள்" "நாயகர்கள்" ஆகியோருக்கிடையில் ஒரு பெரிய வழக்கு! விசாரித்த நீதிபதியோ, ஒரு வெள்ளையர்!! ஊரிலுள்ள, விநாயகர் கோயில், யாருக்குச் சொந்தம் என்பதே வழக்கின் காரணம். விசாரித்த நீதிபதி, மிகவும் சுலபமாக, கோயிலின் உரிமை 'நாயகர்'களுக்கே சொந்தம் என்று தீர்ப்பு எழுதினார். அதைப் பற்றி அவரைக் கேட்டபோது, —தனிப்பட்ட முறையில்—சொன்னாராம், "கஷ்டமில்லாத வழக்கு சார், இது. கோயில் பெயர், **'விநாயகர்'** வழக்குப் போட்டிருப்பவரோ, **'நாயகர்'** சந்தேகம் என்ன! கோயில், அவர்களுக்குத்தானே சொந்தம்!" என்பதாக.

இந்துமத சம்பந்தமாக விசாரித்த பல வெள்ளைக்கார நீதிபதிகள், இவ்வண்ணம் குழம்பி, தீர்ப்பு வழங்கிய விபரங்கள் பல உண்டாம் —கூறப்படுவதுண்டு, நாட்டில்.

ஆறுமுகம் கொலை செய்வதற்கு முன்பே 'சீர்திருத்தம்' பேசுபவர்களை வெறுக்கும் கூட்டம் ஆதிக்கம் புரிகிறது. சேரி வாழ்வோரை சரிசமானமாக நினைக்காதவர்கள்தான் அதிகாரத்திலிருக்கின்றனர். ஆகவேதான், ஆறுமுகத்தைவிட மகாமட்டமான செயல்கள் தினம் நடைபெற்றபோதிலும், அவைகளைப்பற்றி கவலைப்படாமல், ஒரு சேரி வாழ்வோன் கொலை செய்தான் என்றவுடன், அந்த ஒரு காரணத்தை வைத்துக்கொண்டே நகரின் குடிசைகள் எல்லாம் சோதனை போடப்பட்டு, புரட்சி பேசும் தலைவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஆறுமுகத்தின் சார்பாக வாதிட வந்திருக்கிறேன்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும்; இன்றைய சமுதாயத்தில் ஆறுமுகங்கள் புதிதானவர்களல்ல என்பது. ஆறுமுகம் தனிப்பட்ட உதாரணமுமல்ல, நாட்டிலே நாலா பக்கத்திலும், சேற்றிலும் சகதியிலும் வாழ்ந்துகொண்டு, நமது வளர்ச்சியடைந்த நாகரிகத்தால் பண்படுத்தப்படாமல், காலத்தால் முன்னேற்றப்படாமல் வாழும் ஆறுமுகங்கள் ஏராளம். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் ஆறுமுகங்களைச் சந்திக்கிறோம். அதேமாதிரி, ஒவ்வொரு நேரத்திலும், ஆறுமுகங்கள்மேல் வெறுப்பை வளர்த்துக்கொண்டே போகிறோம்.

இன்றைய தினம் உங்களிடம் நான் முதலில் ஞாபகப்படுத்த விரும்புவது இதுதான். ஆறுமுகத்தின் மேல் நீங்கள் எள்ளளவும் பரிதாபப்படவேண்டிய அவசியமே இல்லை! என்னுடைய வாதம் அவன் மேல் பரிதாப உணர்ச்சியை உண்டாக்க அல்லவே அல்ல. அதேமாதிரி ஏதோ பெரும் பழிக்கும், ஏமாற்றுதலுக்கும் அவன் ஆளாகி இருக்கிறான் என்றும் கூறவில்லை. ஒன்றே ஒன்றுதான். இந்த ஏழைப் பையனை புரிந்துகொள்வதற்கு உங்களையே நீங்கள் உற்றுநோக்கிக் கொள்ளுங்கள். ஆறுமுகங்களைப் பற்றிய விளக்கத்திற்கு உங்கள் சமுதாயத்தையே நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

சமுதாயம் நாம் எல்லோரும் சேர்ந்து உண்டாக்குவதுதான். அதிலே கள்ளி, காளான்கள் முளைக்கக் காரணம் என்ன? நாள்தோறும் வளர்ந்து வரும் நமது சமுதாயத்தில் இந்த ஆறுமுகங்களும் வளர்ந்துவரக்காரணம் என்ன? நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ச்சியடையும் நமது நாகரீகம் ஆறுமுகங்களையும் உற்பத்தி செய்யக் காரணம் என்ன? இந்த அடிப்படை ஆராய்ச்சிகளை முழுவதும் செய்ய இங்கு நேரமில்லை; தேவையுமில்லை. ஆனால் ஒன்றை மாத்திரம் நாம் ஞாபகத்திற்குக் கொண்டு வரலாம். இந்த சேரி வாழ்வோரும் ஆதிகாலத்தில் நம் மூதாதையருடன் கூடவேதான் பிறந்தனர். வரலாற்றில் ஒரு நேரத்தில் நம் மூதாதையரும், ஆறுமுகத்தின் மூதாதையரும் ஒரேவாழ்க்கைத்தரத்தில்தான் இருந்தனர். இந்த உண்மையை நாம் மறக்கக்கூடாது.

பின்னால் நமக்குள் நாலுஜாதிகள் திணிக்கப்பட்டது. நாமெல்லாம் அதிர்ஷ்டவசமாகவோ, அல்லது நம்முடைய முன்னோர்களின் தந்திரத்தாலோ உயர்ஜாதியில் பிரிக்கப்பட்டோம். அதன் பலன் உயர்ஜாதியினரின்வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டே சென்றது. இந்த சேரி வாழ்வோர் இருந்த இடத்திலேயே தங்கிவிட்டனர்.

அவர்களுடைய உழைப்பை உயர் ஜாதியினர் உறிஞ்சினர். அவர்களை அடிமையாக்கினர். சேரிவாழ்வோர் உழுதனர், பயிரிட்டனர், விளைந்ததை அறுவடை செய்தனர். ஆனால் அந்த அறுவடையை அனுபவித்து வருவது மேட்டுக் குடியினர். சுருக்கமாக என்னை விளக்கச் சொன்னால், தச்சன் சுத்தியலையும், உளியையும், ரம்பத்தையும் உபயோகப்படுத்துவதுபோல், இந்தமாளிகைவாசிகள், இந்த ஆறுமுகங்களை உபயோகப்படுத்தினர். மேட்டுக் குடியினரின் இஷ்டப்படியே, இந்த ஆதித்திராவிடர்களின் வாழ்க்கைஅமைக்கப்பட்டது.

இந்தப் பயங்கர உண்மையைக் கூறுவதால், நான் மதத்தையோ, கடவுளையோ தூஷிப்பதாக எண்ண வேண்டாம்.நாட்டிலேநடப்பதையும், வரலாற்று ஏட்டிலே இருப்பதையும்தான் கூறுகிறேன்; அதுவும் ஆறுமுகத்திற்கும் இந்தக் கொலைகளுக்கும் உள்ள பொறுப்பை விளக்க!............"

இதற்குள் இடைவேளைக்கான மணி அடித்தது.

"கோர்ட் கலைகிறது. மறுபடியும் மூன்று மணிக்குத் தொடரும்!" என்று மேஜையைத் தட்டியபடி கூறினார் நீதிபதி.

நெடுமாறன், நெற்றி வியர்வையைத் துடைத்த வண்ணம் ஆறுமுகத்தினருகில் சென்றார்.

(தொடரும்)

## பம்பாயில்!

★

பம்பாய் தி. மு. கழக ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா நவம்பர் 13, 14, சனி ஞாயிறுகளில் தாராவி வ. உ. சி. திடலில் நடைபெற்றது. முதல் நாள் கூட்டத்திற்கு தோழர் எஸ். தியாகராசன் தலைமை தாங்கினார். தோழர் வளர்மதி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் பி.எஸ். செல்லையா கழகக்கொடியை ஏற்றுவித்து கொடியின் இலட்சியம் குறித்து சிறந்ததோர் விளக்கவுரையாற்றினார். அடுத்து தாயகத்திலிருந்து வந்திருந்த அருப்புக்கோட்டை **எம். எஸ். இராமசாமி** பலத்த கைதட்டுதலுக்கிடையே பேசினார். இரா. மா. சண்முகராசன் நன்றி கூறினார்.

மறுநாள் கூட்டத்திற்கு தோழர் இரா. மா. சண்முகராசன் தலைமை தாங்கினார். தோழர்கள் சு. வள்ளிநாயகம். உ. அ. செல்லையா ஆகியோர் பேசினார்கள். பின்னர் அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி இன்றைய அரசியல் நிலைகுறித்து அரியதோர் சொற்பொழிவாற்றினார். தலைவர் முடிவுரைக்குப் பின்னர் செயலாளர் எஸ். தியாகராசன் நன்றி நவில கூட்டம் இனிதுகலைந்தது.

இரண்டு நாட்களிலும் முறையே தோழர்கள் கே. ஏ. சற்குணம் சண்முகநாதன், திராவிட சாம்ராஜ் ஆகியோர் இன்னிசை வழங்கினர். ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டு கூட்டங்களிலும் தோழர்ராமசாமிக்குப் பல கிளைக்கழகங்களாலும், தனிப்பட்ட தோழர்களாலும்,மலர்மாலைகளும்,கைத்தறி துணிகளும் வாழ்த்துக்களும் அளிக்கப்பட்டன.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" PreSs,
95, Tirukkachinambi St, Kancheepuram.